# மங்கையர்க்கரசி



கவிஞர் சுரதா

# மங்கையர்க்கரசி

கவிஞர் சுரதா

சுரதா பதிப்பகம்
சென்னை-600 078

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1950
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி, 1978.

கல்லாடன் தயாரிப்பு

விலை ரூ. 3-00

சுரதா பதிப்பகம்
56-அ, டாக்டர் லட்சுமணசாமி முதலியார் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

அச்சிட்டோர்: ஜீவன் பிரஸ், சென்னை-600 005.

# இதோ ஒரு சுரதா

மங்கையர்க்கரசி : இது சினிமாவுக்காக எழுதப் பட்ட கதை. சினிமா எடுக்கப்பட்டு ஓரளவு வெற்றி யுடன் நடந்து வருகிறது.

ஒருகதை சினிமாவில் வந்தபின் அதைச் சுவடியாக அச்சிட்டு வெளியிடுவதால் மக்களிடம் சினிமா அறிவு வளரும். கதையமைப்பு, சோடிப்பு, பேச்சழகு, முதலிய வற்றின் அருமை பெருமை விளங்கும்.

சினிமாவில் வந்த கதையைப் பெரும்பான்மை முதலாளிகள் அதை அப்படியே அச்சிட்டு வெளியிட எண்ணுவதில்லை. அவர்கட்குக் கதை கிடைக்கும் வகையிலும், அதை எழுதி முடிக்கச் செய்த வகை யிலும், அவர்கள் கையாண்ட சூழ்ச்சிகளும், போதிய தமிழறிவின்மையும் அதற்குக் காரணமாகும்.

சுரதா எழுதிய மங்கையர்க்கரசியை, அவர் தம் பொறுப்பிலேயே சுவடியாக அச்சிட்டுத் தருகிறார். இதனால் ஓர் எழுத்தாளனுக்கு இருக்கவேண்டிய கையிருப்புத் தம்மிடம் இருப்பதாக நம்புகிறார் சுரதா. இரண்டு காரணங்களால் சுரதாவின் எழுத்துக்குச் சுரதா எழுத்தே நிகர்.

முதற்காரணம் : அவர் பிறர் எழுதியதிலிருந்து திருடுவதில்லை; கருத்தையோ தொடரையோ! தானே தோன்றிய சொற்றொடர் ஒவ்வொன்றும் இனிக்கும் கவிதைத் துணிக்கை! எடுத்துக்காட்டாக : ஒரு கவிஞனை நல்ல முறையில் அறிமுகப்படுத்துகிறார் சுரதா :

**"இவர் கவிஞர் திலகம் காவியங்களின் தந்தை"** என்று. சர்வாதிகாரத்தை வெறுத்துப் பேசுகிறார் சுரதா :—

" ஒரு நாட்டை மகுடங்கள் ஆட்சி செய்யக்கூடாது
மக்கள் எண்ணம் ஆளவேண்டும்"

இரவுக்கு அழகு சேர்க்கிறார் :—

" நட்சத்திரங்கள் தாலாட்டும் இந்த
இனிமையான நேரத்தில்"

மற்றோரிடத்தில்,

" அவள் சாகவில்லை, அவளுக்கிருந்த
மரணந்தான் செத்துவிட்டது"

என்று கூறிச் சுரதா பாலைவனத்தில் "பச்சைப்பலா" வைத்தருகிறார். ஒருத்தியை வெறுத்துப் பேசுகிறான் ஒருவன். அவ்விடத்தில் சுரதா எழுதியுள்ள தொடர் ஆழ்ந்த கருத்தையும் அள்ளூறும் சுவையையும் பயப்பது.

" மானைப்போல் பார்க்கத் தெரிந்த உனக்கு,
அதன் மானத்தைப்போல் வாழத் தெரியவில்லையா?"

மங்கையர்க்கரசியில் எங்கும் இவ்வகை இன்பத் தொடர்களைக் காணலாம். மங்கையர்க்கரசி ஓரிடத்தில் தன் உண்மையை விளக்கியும், பிறர் மடமையை எடுத்துக் காட்டியும் பேசும் நீண்ட பேச்சு ஓர் அழகிய சிறு காப்பியமாகும்.

முதலாளிகள் கண்ணை மூடிக்கொண்டு. இதோ இந்தக் கதையை எழுதி முடிப்பீர் என்று ஒப்படைத்து விட்டால் கனகச்சிதமாக எழுதி முடித்துத்தர ஓர் எழுத்தாளர் தமிழ்நாட்டில் இருக்கிறார். அவர் பெயர் **சுரதா.** அவர் வாழ்க !

***14-1-1950***
**புதுவை.** பாரதிதாசன்

# உறுதியாக நம்புகிறேன்

ஸ்ரீ சுரதா அவர்களை வெகு நாட்களாக அறிவேன். பல ஆண்டுகளுக்கு முன்னரே அவருடைய கட்டுரைகள், நாடகங்கள், முதலியவற்றை என்னிடம் காட்டுவதுண்டு. அப்போதே இவருடைய எழுத்துக்களின் உணர்ச்சியைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். நல்ல எழுத்தாளராகப் பேர் பெறக்கூடிய பல அம்சங்கள் இவருடைய கட்டுரைகளில் இருந்ததைக் கண்டு நான் பாராட்டியிருக்கிறேன்.

இந்த "மங்கையர்க்கரசி" என்னும் வசன நூலை நான் படித்துப் பார்த்தேன். இதை ஏற்கனவே திரைப்படத்தின் மூலம் மக்கள் கண்டு ரசித்திருக்கிறார்கள். இவருடைய வசன நடைப் போக்கை அறிவேன். இதிலுள்ள கதையின் போக்கைப்பற்றிப் பல அபிப்ராயங்கள் இருக்கலாம். ஆனால், ஸ்ரீ சுரதாவின் வசனநடை மிகவும் போற்றற்குரியது. ஜீவன் நிரம்பியிருக்கிறது. பாத்திரத்துக்கேற்ற பேச்சு பளீரென்று வருகிறது.

நம்முடைய சுதந்திரக் குடியரசாட்சி நன்றாக நடைபெற வேண்டுமானால் திரைப்படத்தையும் நாடகத்தையும் மிகவும் புதிய முறையில் சீர்படுத்தவேண்டும். அதற்கு

விறுவிறுப்பான நல்ல வசனங்கள் எழுதக்கூடி கூடியவர்கள் தேவை. அந்தத் தேவைக்கு ஸ்ரீசுரதா மிகவும் உபயோகப்படுவார் என்று உறுதியாக நம்புகிறேன்.

புதுப்புதுக் கற்பனைகளுடன் சுரதாவின் எழுத்து வெகு விரைவில் புகழடையவேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

நாமக்கல்
20-1-1950

ஆஸ்தான கவிஞன்
நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை



புதுக்கோட்டைத் தங்கமாய்
நடிகர்களுக்கோர் சிங்கமாய்
விளங்கிய பி. யு. சின்னப்பா
அவர்கட்கு இந்நூலைப்
அன்புடன் படைக்கின்றேன்.

சுரதா
*8 - 2 - 1978*

# சூரியன் மீண்டும் உதிக்கிறது

திரைப் படங்களுக்கு, இன்று யார் வேண்டுமானாலும் உரையாடல் எழுதிவிடலாம். அவ்வாறே படங்களுக்குப் பாடல்களும் எழுதிவிடலாம். ஆனால், 1950-க்கு முன் இப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. ஒரே ஒரு இளங்கோவன்தான் வசனம் எழுத முடியும். ஒரே ஒரு உடுமலை நாராயணகவி தான் பாடல்கள் எழுத முடியும்.

அப்படிப்பட்ட கால கட்டத்தில், சிறுவனாகிய நான் 1944-ஆம் ஆண்டு, பி. யு. சின்னப்பா, பி. கண்ணாம்பா, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலியோர் நடித்த மங்கையர்க்கரசி என்னும் படத்திற்கு வசனம் எழுதும் அரிய வாய்ப்பினைப் பெற்றேன்.

"இந்தச் சிறுவனா இப்படத்திற்கு வசனம் எழுத முடியும்? என்று அப்போது பலர் பேசிக் கொண்டனர். ஆனால் நடிகர் சின்னப்பவோ, என் எழுத்தாற்றலைப் பாராட்டிய தோடு படாதிபதிகள் பலருக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவருடைய ஆதரவு மட்டும் எனக்கு இல்லா திருக்குமாயின், நான் ஒரு வசனகர்த்தாவாகியிருக்க முடியாது.

முதன் முதலில் நான் வசனம் எழுதிய இப்படம் 3—9—1949-ல் வெளிவந்தது. அது முதல், இளங்கோவனைப் போல் நானும் ஓர் சிறந்த வசனகர்த்தா என்று பலராலும் பாராட்டப் பெற்றேன்.

இப்படத்தில் வரும் உரையாடல் மிகச் சிறந்த உரை யாடல் என்று பலரும் கருதிய காரணத்தால், இதனை ஒழுங் காகத் தொகுத்துக் காலத்தை வென்ற கவிஞர்கள் இரு வரின் அணிந்துரைகளோடு 1950-ல் முதல் பதிப்பாக வெளி யிட்டேன். 28-ஆண்டுகளுக்குப் பிறகு இந்நூல், இரண்டாம் பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

இதையடுத்துப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும், பி. எஸ். சரோஜாவும் நடித்து 1953-ல் வெளிவந்த ஜெனோவா என்னும் படத்திற்கு நான் எழுதிய உரையாடல் வெளிவரும்.

8—2—1978

சுரதா

# மங்கையர்க்கரசி

## காட்சி—1

### இடம்: அரண்மனை

[மதுராபுரியில் வசந்தவிழா கொண்டாடுகின்றனர். அரண்மனையில் இளவரசன் காந்தரூபனையும், அவன் மனைவி மங்கையர்க்கரசியையும் தோழிகள் வாழ்த்துப்பாடி ஆரத்தி எடுக்கின்றனர். அப்போது காந்தரூபனின் தந்தை மதுராங்கதன் அங்கே வருகிருன் அவனைக் கண்டு இளந்தம்பதிகள் இருவரும் வணங்குகின்றனர். அவர்களைப் பார்த்து]

**மதுராங்கதன் :** காந்த ரூபா! நீ மகாபாக்கியசாலி. உன் வாழ்க்கைத்துணைவி மங்கையர்க்கரசி ... நம் அரண்மனைக்கே ஒரு அணையாத விளக்கு. உங்கள் மங்களகரமான வாழ்க்கைக்கு...அம்பிகை என்றும் அருள்புரியட்டும். நீங்கள் என்றென்றும் நீடூழி வாழ்வீர்களாக!

[என்று வாழ்த்துகிருன். பிறகு காந்தரூபனும் மங்கையர்க்கரசியும் அவ்விடத்தைவிட்டுத் தான மண்டபத்துக்கு வந்து, குடிமக்களுக்குப் பரிசுகளை வழங்குகின்றனர். இதை உப்பரிகையிலிருந்து மன்னன் மதுராந்தகனும் மந்திரியும் பார்க்கின்றனர்.]

**மந்திரி :** கொடுப்பதில் கர்ணனையும் மிஞ்சிவிட்டார் நம் இளவரசர்.

**மதுராங் :** அதையும் வெல்கிறதல்லவா மங்கையர்க் கரசியின் தியாகம். அமைச்சரே ! காந்தருபனும் மங்கையர்க்கரசியும் என் இரு கண்கள். அதில் ஒன்று வானம்....

**மந்திரி :** மற்றென்று ... அதில் தோன்றும் வர்ணவில்

[என்று புகழ்ந்துபேசிக்கொண்டிருக்கின்றனர். அப்போது தான மண்டபத்துக்கு கவி வித்தி யாபதி, கையில் ஒரு வெள்ளித் தொட்டிலுடன் வந்து காந்தருபனை வணங்கியபடி]

**கவி வித்தியாபதி :** இளவரசே !

**காந்த :** ஓ! கவி வித்தியாபதியா ! வா வா !

**கவி :** கண்ணுடி நதிகள் ஒட்டிக்கொண்டிருக்கும் காஷ் மீரதேசம் சென்றிருந்தேன். அதனால்தான் உங்கள் கல்யாணத்துக்கூட வரமுடியாமல் போய்விட்டது.

**காந்த :** பரவாயில்லை. வித்தியாபதி! நீ வெகு தூரத்தில் இருந்தாலும் ... உன் வார்த்தைகள் என் பக்கத்தி லேயே இருக்கின்றன.

[என்று கூறிப் பிறகு தன் மனைவியைப்பற்றிக் கவிஞனிடம்]

**காந்த :** நண்பா ... இவள்தான் என் மனைவி மங்கை யர்க்கரசி. இந்த மகுடத்தின் வெளிச்சத்தை வளர்க்கும் மாணிக்கம்.

[என்று கூறிப் பிறகு கவிஞரைப்பற்றி தன் மனைவியிடம்]

**காந்த :** மங்கையர்க்கரசி !...இவர் என் பால்ய நண்பர். பள்ளித்தோழர். கவிஞர் திலகம். காவியங்களின் தந்தை.

[என்று கூறி அறிமுகப் படுத்திவைக்க, அப் போது]

**மங்கை :** மகிழ்ச்சி. இவர் காவிய ஞானத்தைக் கேட்க எனக்குப் பிரியமாக இருக்கிறது இளவரசே!

**கவி :** அதற்கென்ன எப்பொழுது வேண்டுமானாலும் சித்தமாயிருக்கிறேன்.

[என்று கூறிக்கொண்டே தான் கொண்டுவந் திருக்கும் தொட்டிலை இளவரசனிடம் நீட்டியபடி]

**கவி :** இது இளவரசிக்கு.

[என்று கொடுக்க காந்தருபன் வாங்காமல்]

**காந்த :** இதை நீயே கொடுக்கலாம்.

[என்று சொல்ல, கவி உடனே இளவரசியிடம் கொடுக்க, இளவரசி அதை வாங்கிக் கூர்ந்து பார்த்து ஆச்சரியத்தோடு]

**மங்கை :** சிங்காரமான தொட்டில். இதில் ஒரு சித்திரக் குழந்தை. என்ன விசித்திரமான வேலைப்பாடு. இதைப் படைத்தவன் இதன் அழகுக்கு அதிகமான வாலிபத்தை உண்டாக்கிவிட்டான் இளவரசே! இந்த வெள்ளிச் சிலைக்கு உயிர் இருந்தால், இந் நேரம் என்னை அம்மா என்று அழைத்திருக்கும்.

[என்று கூற, கவிஞன் இளவரசியின் காவிய உள்ளத்தை ரசித்து, மகிழ்ச்சியோடு]

**கவி :** இளவரசே! இளவரசி ஒரு அழகு ராணி மட்டு அல்ல. வித்தையிலும் ஒரு வாணிதான். இவர்களை அடைந்தது தங்கள் பாக்கியம்.

**காந்த :** கவிஞனே! ஓய்வான நேரங்களில்; அடிக்கடி இங்கே வந்து போ.

**கவி :** ஆகட்டும்.

[என்று கூறி அவ்விடத்தைவிட்டுப் போக, பிறகு இருவரும் தோட்டத்துக்குவந்து மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டிருக்கின்றனர். பாட்டின் இடையில், மேகமண்டலத்தில் தன் தோழிகளுடன் போய்க்கொண்டிருந்த சசிகலா காந்தருபனைக்கண்டு மோகமடைந்து ரவிதா என்பவளைப் பார்த்து]

**சசிகலா :** ஆஹா! அவர் எவ்வளவு அழகாக இருக்கிறார்.

**ரவிதா :** கந்தர்வ லோகத்தில்கூட இப்படியொரு சுந்தர புருஷனைப் பார்க்கமுடியாது.

**சசி :** ஆம், அவரை அடைந்தே தீரவேண்டும்.

[என்று கூறி, சசிகலா தன் தோழிகளைப் பிரிந்து தனியாக காந்தருபனிடம் வருகிறாள். அப்போது அவர்கள் பாடிக்கொண்டிருந்த பாட்டு முடிய இளவரசி அவனைப் பார்த்து]

**மங்கை :** இளவரசே! உங்களுக்கு நான் ஒரு பரிசுப் பொருள் வைத்திருக்கிறேன்.

**காந்த :** என்ன பரிசுப் பொருள்?

**மங்கை :** இதோ கொண்டு வருகிறேன் பாருங்களேன்.

[என்று கூறிப் பக்கத்தில் இருந்த ஒரு பூமாலையை எடுத்துவந்து அவன் கழுத்தில் போட]

**காந்த :** ஓ! இதுதானா அந்தப் பரிசுப் பொருள். நம் சந்தோஷமான நேரத்துக்கு ஏற்ற சரியான பரிசு.

மங்கை : இளவரசே! நம்மை நட்சத்திரங்கள் தாலாட்டும் இந்த இனிமையான நேரத்தில்...

காந்த : தென்றலைச் சந்தோஷப்படுத்த அதோ நாட்டியமாடும் மலர்களைப் பார்த்துக்கொண்டு...

மங்கை : நான் மட்டும் சும்மா இருப்பேனா? இதோ உங்களை சந்தோஷப்படுத்த நான் நாட்டியமாடப் போகிறேன்.

காந்த : எங்கே?

மங்கை : இளவரசே கொஞ்சம் பொறுங்கள். நாட்டிய உடை அணிந்துகொண்டு இதோ வந்துவிடுகிறேன்.

காந்த : மங்கையர்க்கரசி ... இது என்ன விளையாட்டு ஆடை அணிந்து அதற்குள்ளாகவா வந்து விட்டாய்?

[என்று சொல்லிக்கொண்டே அவள் கையை விலக்கிப் பார்க்க அவள் சசிகலாவாக இருப்பதைக்கண்டு]

காந்த : ஆ! நீ யார்?

சசிகலா : நான் கந்தர்வப் பெண். என் பெயர் சசிகலா

காந்த : நீ இங்கே வரக் காரணம்?

சசி : காரணத்தோடுதான் வந்தேன்.

காந்த : யாரிடம் இப்படிப் பேசுகிறாய்? மரியாதையாகப் போய்விடு.

சசி : என்னுடன் கந்தர்வ லோகத்துக்கு வாருங்கள் இளவரசே!

காந்த : நீ போகமாட்டாயா ?

[என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, மங்கையர்க்கரசி வருவதைக்கண்ட சசிகலா உடனே காந்தரூபனை மாலையாக மாற்றி எடுத்துக்கொண்டு மறைந்துவிடுகிருள். பிறகு மங்கையர்க்கரசி வந்துபார்க்க, கணவன் இல்லாததைக்கண்டு]

மங்கை : இளவரசே ... இளவரசே ... நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் இளவரசே !

[என்று கூற ஒரு பதிலும் வராததுகண்டு, மறுபடியும்]

மங்கை : பேசமாட்டீர்களா ? ஆ ! என்ன இது ...... என் மன்னர் எங்கே ?

[என்று கூறிக் கலங்கிக் கொண்டிருக்கும் போது தோழிகள் அங்கேவர அவர்களைப் பார்த்து]

மங்கை : ரூடலேகா ... ரேவதி ... இளவரசரைப் பார்த்தீர்களா ?

ரேவதி : இல்லையே ! ...

மங்கை : ஆ !

[என்று அலறியபடி அவ்விடத்தைவிட்டு ஓடுகிருள்.]

## காட்சி—2

**இடம் : மதுராங்கதன் அறை**

[மதுராந்தகன் படுக்கை அறையை இரண்டு தோழிகள். சரிப்படுத்திக் கொண்டிருக்கின் றனர். மதுராந்தகன் உலவிக் கொண்டிருக் கிருன். அப்போது ராணி வசந்தவதி மன்னர் மதுராங்கதனைப் பார்த்து]

**வசந்தவதி :** நீங்கள் என்ன சொன்னலும் முடியாது. காந்தருபனையும் மங்கையர்க்கரசியையும் பிறந்த இடத்துக்கு ...... நாளைக்கே அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

**மதுராங்கதன் :** வசந்தவதி ... அவசரப்படாதே ! புதிய தம்பதிகள் மக்களின் வாழ்த்துக்களை ....... சில மாதங்கள் இருந்து காது குளிரக் கேட்கட்டும். பிறகு நீ அவர்களை அழைத்துக்கொண்டு போவதில் எனக்குத் தடை இல்லை.

**வசந்த :** அப்போது ...

[என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது ஒரு தோழி வேகமாக அவ்விடம் ஒடிவந்து வணங் கியபடி]

**தோழி :** மஹாராஜா ! மஹாராஜா ! இளவரசர் மாய மாக மறைந்துவிட்டார்.

**மதுராங் :** என்ன !

**வசந்த :** மறைவதா ! என்ன விளையாடுகிருயா ?

**தோழி :** இல்லை. உண்மையாகவே இளவரசரைக் காணேம்.

**மதுராங் :** என்ன !

வசந்த : காணேமா !

[என்று கூறி விதிர் விதிர்ப்புடன் அவ்விடத்தை விட்டு விரைந்து செல்கின்றனர்.]

## காட்சி—3

இடம் : அரண்மனையின் ஒருபுறம்

[மந்திரி பணியாட்களைப் பார்த்து]

மந்திரி : இளவரசர் ... மாயமாக மறைந்துவிட்டாராம். எட்டுத் திக்குகளிலும் சென்று தேட ஏற்பாடு செய்யுங்கள்.

[என்று கூறி பணியாட்கள் மந்திரியை வணங்கியபடி வெளியேறுகின்றனர்.]

## காட்சி—4

இடம் : கந்தர்வ லோகம்

[கந்தர்வப் பெண்கள் சுற்றிலும் நிற்க, இருவர் ஆண் பெண் வேஷம் போட்டு நடிக்கின்றனர்.]

ஆண் நடிகை : மாதரசே...மடப்பிடியே மாங்குயிலே... மௌனமேனோ ... எங்கே எனக்கொரு ...

[என்று கூறிப் பெண் நடிகையை முத்தமிடப் போகையில் அவள் நகர்ந்து சென்று]

பெண் நடிகை : என்னை விடுங்கள். இந்த ஆண்களையே நம்பக்கூடாது. அதிலும் நீங்கள் நரர்.

ஆண் : ஏன் ? என்மீது கோபமா ? கண்ணே! உன்னைக் கண்டதுமுதல் ... நான் கிறுகிறுத்துப் போனேன்.

[என்று கூறிக்கொண்டிருக்கையில், பக்கத்திலிருந்த பெண்கள் சிரித்து, மலர்களை அவர்கள் மீது விட்டெறிந்தபடி]

பெண்கள் : மங்களமுண்டாகட்டும்.

[என்று கூறி அவர்கள் அருகில் வருகின் றனர். அவர்களில் ஒருத்தி]

ஒருபெண் : என்ன அழகான தலைப்பாகை.

[என்று ஆண் நடிகையின் தலைப்பாகையை எடுக்க, மற்றொருத்தி]

அடுத்தபெண் : உங்கள் மீதுதான் எனக்கு ஆசை.

[என்று அவள் ஒட்டியிருக்கும் மீசையை எடுக் கிறாள். அப்போது சசிகலா தோன்றி]

சசிகலா : இது என்ன நாடகம்?

மற்றொருபெண் : இதுவா ... காதல் நாடகம்.

சசி : என்ன ?

ஒருத்தி : அவரை எப்படிக் காதலிப்பதென்று ...

சசி : எவரை ?

ஒருத்தி : அவரைத்தான். எங்கே அவரைக் காண வில்லை. இது என்ன மாலை ?

[என்று சசிகலா அணிந்திருக்கும் மாலையைத் தொடுகிறாள். சசிகலா தடுத்து]

சசி : உஸ் ... தொடாதே ... இதுவா ...

[என்று சொல்லிப் பக்கத்தில் உள்ளமஞ்சத்தில் எறிகிறாள். மாலை காந்தருபனாக மாறுகிறது. இதைக்கண்டு]

ஒருத்தி : நம் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

சசி : இல்லை. இது என் அதிர்ஷ்டம்.

[என்று சொல்லித் தன் தோழிகளுடன் நாட்டிய மண்டபத்தில் இருந்தபடி கையைக்காட்ட, காந்தருபன் மயக்கம் தெளிந்தவனைப்போல்]

**காந்தரூபன் :** எனக்கு ... மனமயக்கமா ?

**சசி :** ஆம். மதுரமான பொருளைக் கண்டால் ... மயக்கந்தானே உண்டாகும்.

[என்று கூறி எழுந்து சசிகலாவைப் பார்க்கிறான். அவன் கண்களுக்குச் சசிகலா மங்கையர்க்கரசியாகத் தெரிய, மகிழ்ச்சியோடு பாடுகிறான். தேவகன்னிகைகள் ஆடுகின்றனர். பிறகு காந்தரூபன் அவளைத் தழுவுகிறான். அப்போது அவள் சசிகலாவாக அவன் கண்களுக்குத் தெரிய, இதைக்கண்டு திகிலடைந்தபடி]

**காந்த :** நீயா ? என் மங்கையர்க்கரசி எங்கே ?

**சசி :** க்ஷணத்து க்ஷணம் சஞ்சலத்தை உண்டாக்கும் மனித பூமியில் இருக்கிறாள்.

**காந்த :** அப்போது ... நான் இருப்பது ?

**சசி :** கேள்விப்பட்டாலே இனிக்கும் ...... கந்தர்வ லோகத்தில் !

**காந்த :** ஆ !...அந்தப்புரத்திலிருந்த எங்களை ... இப்படி அநியாயமாகப் பிரிப்பதா? கொடியில் விளையாடிக் கொண்டிருந்த மலரை கொய்துவிட்டாயே!

**சசி :** அப்படிச் செய்ததும் ...... அலங்காரமாகச் சூடி ஆனந்தமாக இருக்கத்தானே ?

**காந்த :** பிரித்தது ... பாபமல்லவா ?

**சசி :** பாபமா ? கண்ணுக்குப் பிடித்தமான கட்டழகனைப் பெண்ணின் பருவஜாலம் திருடியது பாபமா ? ஹும் ...... காதல் மந்திரம் கற்றுக் கொள்ள ... உங்களைக் களவாடி வந்ததா பாபம் ? ஸ்வாமி ... உல்லாசமாக இருப்போம் வாருங்கள்.

**காந்த :** கைப்பிடித்த மனைவி இருக்க...கண்டபெண்களை இச்சிப்பது ... காமுகனின் செய்கையல்லவா ?

**சசி :** நீங்கள் ... என் பதிதானே ஸ்வாமி.

**காந்த :** பதியா...? தெய்வ பூமியில் வாழும் தேவமகள் நீ எங்கே? பூமண்டலத்தை ஆளும் பட்டத்து இளவரசன் நான் எங்கே? நான் உனக்கு புருஷனா? இது பொருந்தாது.

**சசி :** ஆம்! மலரே கூப்பிட்டும் ... வண்டு வாய்மூடிக்கொண்டிருப்பது பொருந்தாதுதான்.

**காந்த :** உன்க்குச் சரியான மயக்கம்.

**சசி :** உங்களைக் கண்ட பிறகுதான்! ஸ்வாமி ... என் உதட்டில் உங்கள் உருவத்தைப் பாருங்கள். என் சிரிப்பில் நெளியும் சித்திரத்தைப் பாருங்கள். நான் அழகாக இல்லையா ?

**காந்த :** நெருப்புக்கு அழகில்லை என்று யார் சொன்னது?

**சசி :** பிறகு ஏற்றுக்கொள்ளுங்களேன். பந்தங்கள் வெளிச்சம் கொடுக்கவும்; ஆபரணங்கள்—அணிவதற்கும்; அழகு—அனுபவிக்கவுந்தானே இருக்கிறது.

**காந்த :** விநோதமான வார்த்தைகள்.

**சசி :** இதை உங்களிடம் பேசினால்தானே தித்திக்கும்!

**காந்த :** இதென்ன கிரஹசாரம்! உனக்குப் புண்ணியமுண்டு. என் மனைவி என்னைக் காணாது...ஏங்கித் தவிப்பாள், தயவுசெய்து......என்னை மங்கையர்க்கரசியிடம் சேர்த்துவிடு.

சசி : அப்போது ... உங்கள் வாலிபத்தையும் ... என் வசந்த பருவத்தையும் ...... அனுபவிக்காமலே அழித்துவிடுவதா ?

காந்த : என்னைத் தொந்தரவு செய்யாதே. என் அன்பில் விளைந்த அமுதத்தைப் பார்க்காமல்...நான் அரைக் கணம்கூட இருக்க முடியாது. நான் பூலோகத் துக்குப் போகவேண்டும்.

சசி : என் புஷ்ப ரூபத்தைக் கண்டுமா...என்னைவிட்டுப் போக மனம் வருகிறது! ஸ்வாமி ... இதோ இந்த தீபத்தின் நாக்கு...உங்கள் கனவுக்குங்கூட கதை சொல்லிக் கொண்டிருக்கும் ... இந்த ஜீவாம்ருதம் உங்களைச் சிரஞ்சீவியாக்கும் ...... பாருங்களேன் ! போகிறேன் என்கிறீர்களே ... எங்கே உல்லாசமாக இருப்போம் ... வாருங்கள்.

காந்த : வானத்துக்கு ... ஒரே சந்திரன். என் வாழ்க் கைக்கு ... ஒரே மங்கையர்க்கரசி. என் ராஜபத் தினியைத் தவிர...என் இதயத்தில் வேறு யாருக் குமே இடமில்லை.

சசி : உங்கள் கோபங்கூட ஒரு அழகுதான் ! இள வரசே !

காந்த : இப்படி அழைக்க ... நீ என் பட்டத்து ராணி அல்லவே!

சசி : உண்மைதான்...இருந்தாலும் ... உங்கள் மன்மத சுகத்துக்கு ... நான் மஹாராணி அல்லவா ?

காந்த : ராணி—மஹாராணி. சரியான சாஹசம்.

சசி : உங்கள் நடிப்புக்குத்தானே !

காந்த : சதிகாரி ... என் எதிரில் நிற்காதே. போய்விடு. [என்றுக் கூறிக் கோபத்தோடு அவ்விடத்தை விட்டுப் போய்விடுகிறான்.]

## காட்சி—5

இடம்: மங்கையர்க்கரசியின் அறை

[மங்கையர்க்கரசி ஒரு ஆசனத்தில் அமர்ந்து கண்கலங்கியபடி இருக்க, அப்போது கவி வித்தியாபதி அங்கே வர, அவனைப் பார்த்து]

**மங்கை:** என் கணவர் என்னைப் பிரிந்து எங்கோ போய் விட்டாரே! என் ஸ்வாமி இருக்குமிடம் உங்களுக்காவது தெரியுமா? அதைச் சொல்லத்தானே வந்தீர்கள்?

**கவி:** இல்லை தேவி... உங்களுக்கு ஆறுதல் கூறிப் போகத்தான் வந்தேன். கணவனைப் பிரிந்த உங்களுக்கு—அம்பிகைதான் அருள் செய்யவேண்டும்.

**மங்கை:** உண்மைதான். திக்கற்றவர்க்கு தெய்வம் தான் துணை. அம்பிகை எனக்கு அருள் செய்வாளா?

**கவி:** நிச்சயம் உதவி செய்வாள். சுக்ரவார விரதம் அனுஷ்டித்து வாருங்கள். கட்டாயமாக உங்கள் கணவனைக் காண்பீர்கள். விரதம் இருக்க முடியுமா?

**மங்கை:** என் அண்ணலை அடைவதற்கு எந்த நோன்பையும் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்.

**கவி:** நல்லது! நான் வருகிறேன்.

[என்று கூறி அவ்விடத்தைவிட்டுப் போகிறான்.]

## காட்சி—6

### இடம்: கந்தர்வலோகம்

[கந்தர்வப் பெண்கள் சசிகலாவைப் பார்த்து]

ஜனி: என்ன ... வெற்றிதானே?

உல்கா: மேனி குளிர்ந்ததா?

ஹேமா: அவர் ... உம் ...

[என்று கேலிசெய்ய, சசிகலா மனங்கலங்கியபடி]

சசிகலா: ஜீவரேகா ... என்னடி அவர் ... மங்கையர்க்கரசியைப் பார்த்துவிட்டுத்தான் மறுகாரியம் என்று ஒரே பிடிவாதம் செய்கிறார். :எவ்வளவு வயனமாகப் பேசியும் ... அவரை வசப்படுத்த முடியவில்லையே ... இதற்கு என்ன செய்வது?

மல்லிகா: சங்கீதத்துக்கு மயங்காத சர்ப்பம் உண்டா! இதோ பார் அவரை ...

[என்று எழுந்திருக்க அப்போது மஹாபிரஜா அவளைத் தடுத்து]

மஹாபிரஜா: மல்லிகா ... மலரைக் கசக்கியா முகர்வது? ... பொறு.

சுஜாதா: அவர் மங்கையர்க்கரசியைத்தானே பார்க்க வேண்டும் என்கிறார். ஒரு முறைதான் கொண்டு வந்து காட்டிவிட்டால்?

சசி: மங்கையர்க்கரசியையா?

பத்மினி: நம் காரியம் நிறைவேற வேண்டுமானால் ... நாம் அவளை இங்கு கொண்டுவந்துதான் ஆக வேண்டும்.

[என்று கூற, சசிகலா அவ்விடத்தைவிட்டு காந்தரூபன் இருக்கும் மஞ்சத்துக்குவந்து அவன் பின் பக்கத்தில் இருந்தபடி]

**சசி :** ப்ரபு ... உங்களுக்குத் திருப்தி ஏற்பட நான் என்ன செய்யவேண்டும்?

**காந்தரூபன் :** வேறொன்றும் செய்யவேண்டாம். நீ இவ் விடத்தைவிட்டு போய்விட்டாலே போதும்.

[என்று கூறி நகர்ந்து உட்கார, சசிகலா அவனை நெருங்கிப்போய் அவன் தோளைத் தொட, அப்போது]

**காந்த :** தொடாதே. நீ தொட்டால் விஷங்கூட இறந்து விடும்.

**சசி :** நான் அவ்வளவு துரோகியா?

**காந்த :** இதைப் பாபத்திடம் கேள். அது பதில் சொல்லும்.

**சசி :** என்னை வெறுப்பதில் பிரயோஜனமில்லை. விதி நம்மைச் சொந்தமாக்கிவிட்டது. நீங்கள் என்னை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

[என்று கூற, காந்தரூபன் அவ்விடத்தைவிட்டு எழுந்து ஒரு பக்கத்தில் நின்றபடி அவளைப் பார்த்துக் கோபமாக]

**காந்த :** உன் அக்ரமங்களை விதியின் பெயரால் மறைக்கப் பார்க்கிறாயா? த்ரோகி! உன் மோகவிகாரத்துக்காக ... என்னை மங்கையர்க்கரசியிடமிருந்து பிரித்த மஹாபாபி. நீயும் ஒரு பெண்ணா? பெண் ரூபத்தில் வந்த பேய். உன்னைக் கொன்றால்தான் என் ஆத்மா திருப்தியடையும்.

[என்று கூறியபடி ஒரு வாளை எடுத்து அவளை வெட்டுவதற்கு ஓங்க, அந்த வாள் உடனே மலராக மாறுகிறது. இதைக்கண்டு மன்னன் மலைக்கிருன். சசிகலா சிரித்தபடி அவனைப் பார்த்து]

**சசி :** இந்த தெய்வ பூமியில் ... என் சக்தியை மீறி நீங்கள் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது!

**காந்த :** உனக்குக் கோடி புண்ணியம். என் பட்டத்து ராணியை...நான் பார்க்கவேண்டும் தயவுசெய்து இந்த உதவியையாவது செய்யக்கூடாதா?

**சசி :** இப்போது ... உங்கள் மனைவிதானே வேண்டும்?

**காந்த :** ஆம்!

**சசி :** உங்கள் மனைவியைக் காண்பிப்பேன். அவளைப் பார்த்து பிறகு ... நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**காந்த :** சரி.

**சசி :** எங்கே சத்தியம் செய்து கொடுங்கள்.

**காந்த :** அம்பிகைமீது ஆணை. உன்னை ஏற்றுக்கொள்கிறேன். இருக்கட்டும். மாயாஜாலத்தால் நீயே மங்கையர்க்கரசி ரூபத்தில் வந்தால்?

**சசி :** நான் தெய்வ ஜாதி! சத்தியம் தவறமாட்டேன்.
[என்று கூறி இரண்டு கந்தர்வப் பெண்களைப் பார்த்து]

**சசி :** மங்கையர்க்கரசியைக் கொண்டு வாருங்கள்.
[என்று கூற, அவர்கள் மறைகின்றனர். பிறகு அவனைப் பார்த்து]

ி : தங்களுக்கு இப்போது மகிழ்ச்சிதானே!

[என்று கூறி அவனை மறுபடியும் மஞ்சத்துக்கு அழைத்து வந்து, ஜீவாம்ருதத்தைக் கொடுத்தபடி]

ி : இந்த ஜீவாம்ருதத்தைச் சாப்பிடுங்கள்.

ந்த : எனக்கு எதற்கு?

ி : எதற்கா? வசந்தகாலம்......விருஷங்களை வாலிபமாக்கும்! இந்த மதுரமான மது——உங்கள் வாழ்க்கையை வாலிபமாக்கும்.

[என்று கூறிக் கொடுக்க, அவன் அதைக் குடிக்கிறான்.]

## காட்சி - 7

### இடம் : தீவு

[காந்தருபனைத் தேடச் சென்ற பலர், கிரவுஞ் தீவில் தேடுகின்றனர்.]

## காட்சி - 8

### இடம் : கந்தர்வலோகம்

[சசிகலாவிடம் இரு கந்தர்வப் பெண்கள் வந்து]

நவகன்னி : மங்கையர்க்கரசியைக் கொண்டுவந்து விட்டோம்.

[என்று கூறிச் செல்ல, உடனே சசிகலா காந்தருபனிடம் வந்து]

சி : ஸ்வாமி

ந்த : என் மங்கையர்க்கரசி வந்துவிட்டாளா?

சி : ஹூம்.

காந்த : எங்கே?

[என்று கேட்க, பக்கத்தில் பஞ்சணையில் படுத்துத் தூங்கும் மங்கையர்க்கரசியைக் காந்தருபனுக்குக் காண்பிக்க, உடனே அவன் அவளிடம் போக எத்தனிக்கிறான். சசிகலா அவனைத் தடுத்து]

சசி : இதோ பாருங்கள். நீங்கள் இப்போது இருக்குமிடம்; நீங்கள் இங்கே வந்தவிதம், இங்கே நடக்கும் ரகஸ்யங்கள்; இதைப்பற்றியெல்லாம் உங்கள் மனைவியிடம் சொல்லக்கூடாது. சொன்னால் அவள் உயிருக்கு ஆபத்து வரும்.

[என்று கூற, பிறகு அவன் தன் மனைவியிடம் வந்து]

காந்த : கண்ணே! கண்ணே!

[என்று கூப்பிட, அவள், விழித்துப்பார்க்க, எதிரே தன் மணாளன் இருப்பதைக்கண்டு ஆச்சர்யத்தோடு]

மங்கை : இளவரசே! நிஜமாகவே நீங்கள் தானா?

[என்று கூறி, அவனைத் தொட்டுப் பார்த்து, தெளிவடைந்து, அவன்தன் கணவன்தான் என்பதை உணர்ந்து, மறுபடியும்]

மங்கை : இல்லை இல்லை...நீங்கள் என் இளவரசேதான் ஸ்வாமி! நான் அலங்கரித்துக்கொண்டு உங்கள் ஆசை முகத்தைப் பார்க்க ஆவலாக ஓடிவந்தேன். அப்போது உங்களைக் காணவில்லையே. அந்நியர்களால் ஏதாவது ஆபத்து நேர்ந்ததா? இல்லை என்னை வேதனைப்படுத்த வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பமா? இது உங்கள் விருப்பமானால்

என்னைத் தவிக்கவிடுவது தர்மமா ஸ்வாமி? சொல்லுங்கள்.

காந்த: உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன! இப்போதுதானே அலங்கரித்துக் கொள்ளச் சென்றாய். திரும்பி வருவதற்குள் இந்தத் தடுமாற்றமா? ஒருவேளை, கண்ணாடியில் மின்னும் உன் பிரதிபிம்பத்தைக் கண்டு மயங்கிவிட்டாயோ?

மங்கை: வேதனைப்பட என்னைவிட்டுப் பிரிந்துபோகவில்லையா?

காந்த: இது வெறுங்கனவு.

மங்கை: உண்மையாகவா?

காந்த: உண்மையாகவே நீ சொல்லுவது சொர்ப்பனந்தான். நானாவது உன்னைவிட்டுப் பிரிவதாவது உன் இன்பத்துக்கு எவ்வளவு நேரமாக இங்கு காத்துக் கொண்டிருக்கிறேன்.

மங்கை: அப்போது, உங்களைக்காணாமல் நான் கண்ணீர்விட்டுக் கதறிய அந்தக் கசப்பான நாட்கள் இன்னும் என் நினைவில் இருக்கிறதே அதை நம்புவதா? இல்லை உங்கள் மன்மத ரூபத்தைப் பார்க்கும் என் மான் விழிகளை நம்புவதா?

காந்த: நீ எதை நம்பினாலும் நம்பாவிட்டாலும் இந்நேரம் என்னைக் கால் கடுக்கத் தனியே நிற்கவைத்தாயே; இந்த தண்டனையையாவது நம்பு.

மங்கை: அது எப்படியோ போகட்டும்; நான் உங்களைப் பார்த்ததே போதும். சந்திரனோடு குளிர்ச்சியும், சத்தியத்தோடு தர்மமும், உருவத்தோடு நிழலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் எவ்வளவு ஒற்று

மையாக வாழ்கின்றன. அதைப்போல் நீங்களும் இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல இனி எந்த ஜன்மத்தி லும் என்னை விட்டுப் பிரியமாட்டீர்களே இளவரசே.

**காந்த :** உன்னையா ... கண்ணே ! நீ கடவுள் எழுதிப் பார்க்கும் காமச்சித்திரம். மேகந்தராத மின்னல் !

**மங்கை :** ஸ்வாமி !

**காந்த :** அன்பே! உன் சிவந்த மேனியில் தோன்றும் சிற்பங்களைக் கண்டால்; மதுவுக்கும் அல்லவா மயக்கம் வந்துவிடும்!

**மங்கை :** ப்ரபு!

**காந்த :** ராஜவதி!

[என்று கூறி இருவரும் சயனசுகம் அனுபவித்துப் பிறகு விழிக்கின்றனர். அப்போது மங்கையர்க்கரசி பக்கத்தில் இருக்கும் ஜீவாம்ருதத்தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, இளவரசனைப் பார்த்து]

**மங்கை :** ஆஹா! என்ன இனிமை! இப்படிப்பட்ட சுவையான வஸ்துவை நான் இதுவரையிலும் அருந்தியதே இல்லை !

**காந்த :** கண்ணே! இதுதான் ஜீவாம்ருதம். சாகாத வாழ்வுக்கு சஞ்சீவி. இதைச் சாப்பிட்டவர்களுக்குச் சாவு கிடையாது. அழகு அழியாது. இளமை மாறாது.

**மங்கை :** என்ன! என் இளமை மாறாதா?

**காந்த :** ஆம்!

**மங்கை :** ஸ்வாமி இப்போது நாம் எங்கிருக்கிறோம்?

காந்த : நம் அரண்மனையில் உள்ள அந்தப்புரத்தில் தான் இருக்கிறோம்.

மங்கை : பார்க்கும் இடமெல்லாம் ஒரே புதுமையாகத் தெரிகிறதே.

[என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, சசிகலா . தன் மந்திர சக்தியால் மங்கையர்க் கரசியைப் பூலோகத்துக்கு அனுப்பிவிடு கிருள்]

## காட்சி - 9

### இடம்: மதுராங்கதன் அறை

[மதுராங்கதன் தன் அறையில் அங்குமிங்கும் உலவிக் கொண்டிருக்கையில், இளவரசனைத் தேடச் சென்ற ஆட்களில் மூவர் அவ்விடம் வந்து]

ஆள் : மஹாராஜா!

மதுராங்கதன் : என் கண்மணி வந்து விட்டாளு?

ஆள் : வேந்தே! கலிங்க தேசம், கடாரம், காடு, மலைப் பிரதேசம், பாலைவனங்கள் எங்கும் அலைந்தோம். எங்கள் கால்படாத இடமே இல்லை. எங்கு தேடியும் இளவரசர் தென்படவில்லை மஹாராஜா.

மதுரா : என் ராஜமகன் இன்னும் தென்படவில்லையா? இந்த சாம்ராஜ்யத்தின் உப்பின் சாமர்த்தியம் இவ்வளவுதானு? மீண்டும் போய்த் தேடுங்கள். என் ராஜதிலகத்தை எங்கிருந்தாலும் கண்டு பிடி யுங்கள் போங்கள் போங்கள்.

[என்று சொல்ல, பணியாட்கள் வெளியேறு கின்றனர். அப்போது அந்தப்புரத்திலிருந்து அந்த மங்கையர்க்கரசி மன்னனிடம்]

**மங்கை :** மஹாராஜா! என் ப்ரபு இருக்கிறார். என் மன்னர் அகப்பட்டுவிட்டார் மஹாராஜா. என் வாழ்க்கை மலர்ந்து விட்டது! இனிமேல் மேகத்தையும் என் ஆனந்தக் கண்ணீரால் ஈரமாக்குவேன்.

**மதுரா :** என்ன! மங்கையர்க்கரசி நீ உன் மணாளனைப் பார்த்தாயா? உண்மையாகவா?

**மங்கை :** ஆம்! நான் அவரைப் பார்த்தேன், பேசினேன்.

**மதுரா :** எப்போது பார்த்தாய்?

**வசந்தவதி:** நாதா! மங்கையர்க்கரசிதான் தன் நிலையில் இல்லை, தங்களுக்குமா இக்குழப்பம்.

**மதுரா :** வசந்தவதி! ஒருவேளை மங்கையர்க்கரசி சொல்லுவது உண்மையாக இருக்கலாம். அம்மா! உன் மகுடபதியைப் பார்த்தாயா? அவன் எங்கிருக்கிறான்?

**மங்கை :** எந்தப் பெயராலும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத ஒரு இன்பமான இடத்தில் இருக்கிறார் என் கணவர்.

**மதுரா :** அப்படியா!

**வசந்த :** மங்கையர்க்கரசி கவலையினால் உன்மனம் அதிகமாகக் குழம்பிவிட்டது. வாம்மா.

[என்று மங்கையர்க்கரசியை அழைத்துக் கொண்டு போகிறாள்.]

## காட்சி - 10

### இடம் : கந்தர்வலோகம்

[சசி: சந்தனச் சந்திரனைப் பார்த்து காம மயக்க மடைந்து, பக்கத்தில் இருக்கும் காந்த ரூபனிடம்]

சசி : ஏன் ? இந்த தெய்வ ராஜ்யம் உங்களுக்குத் திகட்டுகிறதோ?

காந்த : உன்னால் எனக்கு ஒரே வேதனையாக அல்லவா இருக்கிறது.

சசி : பத்தினியைப் பார்த்தபிறகு என்னை ஏற்றுக் கொள்ளுவதாகச் சொன்னீர்களே ?

காந்த: உண்மைதான் இருந்தாலும் என் மனமெல்லாம் மங்கையர்க்கரசியின் மீதல்லவா செல்கிறது. நான் என்ன செய்யட்டும்.

சசி : அப்போது ஆணையிட்டுக் கொடுத்தது இப்படி என்னை ஏமாற்றத்தானோ?

காந்த : சசிகலா இப்போது என் மனோநிலை சரியில்லை. என்னை விட்டுவிடு.

[என்று சொல்ல, சசிகலா மந்திரசக்தியால் அவன் மனதை மாற்றுகிறாள். அவன் பாடுகிறான். பாவை ஆடுகிறார்கள்.]

## காட்சி – 11

### இடம்: மதுராங்கதன் அறை

[மதுராங்கதன் சோகத்துடன் உலவிக் கொண்டிருக்கிறான். அப்போது]

மந்திரி : மஹாராஜா!

மதுரா : என்ன! என் கண்மணி வந்து விட்டானா?

மந்திரி : இல்லை மஹாராஜா! எங்கு தேடியும் இளவரசர் கிடைக்கவில்லையாம்!

மதுரா : என்ன! ஒரு வருஷமாகப் போகிறது. இன்னும் என் கண்மணி அகப்படவில்லையா? காந்தரூபா! வேந்தர்க்கெல்லாம் வேந்தனாக வீற்றிருப்பாய் என்றல்லவோ கனவு கண்டேன். ஐயோ! ஏற்கெனவே புண்பட்டிருக்கும் மங்கையர்க்கரசிக்கு இந்த சஞ்சலமான செய்தியை; நான் எப்படி தெரிவிப்பேன்.

[என்று சொல்லி அவ்விடத்தை விட்டுப் புறப்படுகிறான்.]

## காட்சி - 12

இடம் : பூஜை அறை

[மங்கையர்க்கரசி அறையில் தேவி விக்ரகத்தின் முன் கண்ணீர் விட்டபடி]

மங்கை : லோக மாதா! என் ப்ரபுவைக் காணாமல் நான் படும் அவஸ்தையை உன்னையன்றி வேறுயாரால் உணரமுடியும். என்னை வேதனைப்படுத்துவது உனக்கு ஒரு விளையாட்டா? என் மீது கருணை கிடையாதா? தாயே! ஏன் இந்த மௌனம்? கல்லுக்கு மௌனத்தைப் படைத்த நீ; உன் இதயத்தையும் ஊமையாக்கிக் கொண்டாயா? தேவி

[என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது மதுராங்கதன் அங்கே வருகிறான். அப்போது]

**மங்கை :** என் நாதன் வருவாரா? நான் கர்ப்பிணி. என் கதி என்னவாகும்?

[என்று சொல்வதை மறைவிலிருந்து மன்னன் கேட்டு, மனக் கொதிப்புடன் அரண்மனைக்குச் சென்று பணிப்பெண்களைப் பார்த்து]

**மதுரா :** மங்கையர்க்கரசிக்கு யார் அலங்காரம் செய்வது? யார் உடை உடுத்துவது? யார் ஆகாரங் கொடுப்பது?

[என்று கேட்க, பணிப்பெண்கள் மௌனமாக இருப்பதைக்கண்டு]

**மதுரா :** என் தயக்கம்? என் கோபத்துக்கு வேலை கொடுக்க வேண்டாம். கூறுங்கள்? அந்தப்புரத்துக்கு அந்நியர் யாராவது வருவதுண்டா?

[என்று கேட்க ஒருத்தி மிகவும் நடுங்கியபடி]

**பணிப்பெண் :** கவி ஒருவர் அடிக்கடி வந்து போகிறார்.

**மதுரா :** கவி! அவன் வந்தால் எனக்கு உடனே தெரிவியுங்கள்.

[என்று கூற, அவர்கள் போகின்றனர்.]

## காட்சி - 13

### இடம் : கந்தர்வலோகம்

[சசிகலாவும் காந்தருபனும் சல்லாப போதையில் இதழோடு இதழ் ஊன்றி-மாணிக்க மஞ்சத்தில் ஆலிங்கன மந்திரம் கற்றுக் கொண்டிருக்கின்றனர்.]

## காட்சி - 14

இடம் : மங்கையர்க்கரசியின் அந்தப்புரம்

[கவி அந்தப்புரத்துக்கு வருவதைக் கண்ட தோழி ஒருத்தி, மன்னனிடம் தெரிவிக்க ஓடுகிறாள். இளவரசி கவிஞனைக் கண்டு]

**மங்கை :** அம்பிகை, வைதாரையும் வாழவைப்பாள் என்று எனக்கு ஆறுதல் கூறினீர்களே. என்னிடம் இரக்கங்காட்ட ஏன் தயங்குகிறீர். இதுவரை என்நாயகனைக் கனவிலாவது கண்டு களித்து வந்தேன். இப்போது அதுவும் கலைந்துவிட்டதே!

**கவி :** விரதத்தை மட்டும் விக்னமின்றி நடத்தி வாருங்கள். உங்கள் எண்ணம் ஈடேறும். இது உறுதி.

**மங்கை :** அந்த உறுதிதானே என்னை உயிருடன் வைத்திருக்கிறது. இன்று வருவார் நாளை வருவார் என்று; நாட்களை எண்ணிய விரல்கள் ஓய்ந்தன. மறு வசந்தமும் வரப்போகிறது. என் கணவர் இருக்கும் இடங்கூடத் தெரியவில்லை! நான் பழிச் சொல்லுக்கு ஆளாகி, என் வாழ்க்கை இப்படியே பாழாக வேண்டியதுதானா?

**கவி :** பழிச்சொல்லுக்கு பயப்படாதீர்கள். நேரத்துக்கு ஒரு நினைவு மாற்றும் உலகந்தானே! இளவரசர் நிச்சயமாக வந்துவிடுவார். உங்கள் பிரார்த்தனையோடு இந்த ஸ்லோகங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

[என்று தன்னிடம் உள்ள ஓலைச்சுவடியை மங்கையர்க்கரசியிடம் கொடுக்க; அதை அவள்

வாங்குகிருள். செய்தி அறிந்து அந்தப் புரத்துக்கு வந்துகொண்டிருந்த மன்னன் மதுராங்கதனும் மந்திரியும் இதைப் பார்த்து மறைவாக ஒரிடத்தில் நின்றுகொண்டு இருக்க, அப்போது கவிஞனைப் பார்த்து]

மங்கை : உங்களுக்கு என்னிடம் எவ்வளவு அன்பு! உங்களை சந்திக்கும்போதுதான்—நான் சாந்தமடைகிறேன். உங்கள் கருணைப் பார்வையால்......என் வாழ்க்கை வசந்த புஷ்பமாகிறது.

கவி : சீக்கிரத்தில் அந்த புஷ்பம்; தென்றலை முத்தமிட்டு மணம் வீசி மகிழ்ச்சி தரப்போகிறது.

மங்கை : என்னமோ ... உங்களைத் தவிர எனக்கு உற்ற துணை வேறு யார்? நீங்கள் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது வந்து சந்தித்து போங்கள்.

கவி : ஒரு தடவை என்ன ...... அடிக்கடி வந்து சந்திக்கிறேன்.

[என்று கூறிக்கொண்டிருக்கும்போது, மதுராங்கதன் கோபத்தோடு உள்ளே நுழைந்து]

மதுராங்கதன் : அட துரோகி. சற்று நேரத்தில் உன் மரணத்தைச் சந்திப்பாய். அயோக்யா.

கவி : தாங்கள் கோபிக்க நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே மஹாராஜா.

மதுரா : கயவனே! ...... அந்தப்புரத்தில், அதுவும் பட்டப்பகலில், துராக்கிரமம் செய்ய உனக்கு எவ்வளவு துணிச்சல்.

கவி : மஹாராஜா ... நான் இந்நாட்டுக் கவி. நெஞ்சில் வஞ்சமறியாதவன்.

மதுரா : கவி. படித்த ஏடுகளைப் பாழாக்கிய பாதகன். ராஜத் துரோகி. யாரங்கே.... இவனைக் கைது செய்யுங்கள்.

[என்று கட்டளையிட சேவகன் கவியைக் கைது செய்து அழைத்துப் போக, அதைக் கண்டு]

மங்கை : மஹாராஜா! ... அவர் நிரபராதி. ஒரு பாபமும் அறியாதவர்.

மதுரா : மதுராங்கதன் யார் என்பதை...... நீ அறிய மாட்டாய். என் ராஜரீகத்தின் கொக்கரிப்பு...... நீதியற்ற உன்னை ...... நிர்மூலமாக்கிவிடும்.

மங்கை : என் காதலனைப் பெற ...... அவர் விரதந்தானே இருக்கச் சொன்னார். அது குற்றமா? சஞ்சலத்தைப் போக்க ... மந்திரம் உபதேசித்தது குற்றமா?

மதுரா : என்ன உன் நெஞ்சழுத்தம்! பரபுருஷனுக்குப் பரிந்துபேச வந்துவிட்டாய். நல்லநாள் பார்த்து... மன்னரெல்லாங்கூடி விண்ணதிர முரசுகொட்டி... உன்னை மாலையிட்ட மன்னனுக்கு ... நீ காட்டும் நன்றி இதுதானா? அந்தக் காமாதுரனோடு; விவஸ்தையற்று விநோதம் புரிய ... உனக்கு எவ்வளவு துணிச்சல். கையைப் பாத்திரமாக்கிப் பிச்சை எடுப்போரும் ... இந்த நீச்சத் தொழிலைச் செய்ய அஞ்சுவார்களே!

மங்கை : மஹாராஜா ... நீங்கள் தவறான முடிவுக்கு வந்துவிட்டீர்கள். நான் தீண்ட முடியாத நெருப்பு. பரிசுத்தங்கெடாத பரம்பரையில் பிறந்து வளர்ந்தவள் என்பதை உணருங்கள். என் உடல் ... களங்கத்தை ஏற்க ஒருபோதும் சம்மதிக்காது.

மதுரா : மறுதினத்தில் மகவைப் பெற்று ... மகிழப் போகும் இவள் ... தன்னை மாசற்றவள் என்கிருள் விபசாரி.

மங்கை : ஹா! ... விபசாரி ... சண்டாளத் தெய்வமே இப்பட்டத்தை ஏற்கவா என்னைப் படைத்தாய் என் கதி ... இப்படியா முடியவேண்டும்.

மதுரா : உண்மையை மறைத்து ... என் கண்களை மூடப் பார்க்கிருய். கணவனும் காதலியுமாகப் பேசியதை ... காற்றில் பறக்கவிடுகிருய். விபசாரி.

மங்கை : விபசாரி என்று கூறிய நாக்கு ... இந்நேரம் என் பதியிருந்தால் ... துண்டாகிக் கீழே விழுந்து துடித்திருக்கும். ப்ரபு! இக் கொடுமைக்குள் ஆளாக்கவா ... என்னை விட்டுப் பிரிந்தீர்கள். இனி நான் ஏன் உயிரோடிருக்கிறேன்.

மதுரா : என்ன சாகஸம். கிராதகி. உலகத்தில் ...... சத்தியம் நிலைக்கவேண்டுமானல் ... தர்மம் தலை தூக்க வேண்டுமானல்...உன் போன்ற விபசாரிகள் ஒழியவேண்டும். அமைச்சரே ... இச் சண்டாளியைத் துண்டாக்குங்கள் ... அஸ்தமனம் ... இவள் பாப ரத்தத்தைக் கண்டு பரிகசிக்கட்டும்.

மந்திரி : அரசே! சற்றுப் பொறுங்கள். கொலை ஒன்றல்ல — இரண்டு. கர்ப்பிணியைக் கொலை செய்வது மஹா பாபம்.

மதுரா : இத் துராத்மாவிடமா ... பாப புண்ணியம். களங்கத்தால் உண்டான கரு. இதனிடமா கருணை

காட்டுவது? ஹூம் ... இச் சண்டாளியைத் துண்டாக்குங்கள்.

[என்று கட்டளையிட, கொலைஞர்கள் மங்கையர்க்கரசியைக் கொலை செய்யக் காட்டுக்கு அழைத்துக்கொண்டு செல்கின்றனர்]

## காட்சி - 15

இடம் : கொலைக்களம்

முதல் கொலைஞன் : தாயே! இந்த வழியா தப்பிப் போயிடுங்க.

மங்கை : என்னை வெட்டும்படி அல்லவா மஹாராஜாவின் கட்டளை.

இரண்டாவது கொலைஞன் : எங்க மஹாராணியா இருக்குற ஒங்கள ... எப்படியம்மா கொல்றது. ஐயோ பாவம்! ஒங்களுக்கா இந்த கெதி வரணும்.

மங்கை : கொலைஞனே! விலக்க முடியாத விதியை நினைத்து ... வேதனைப்படுவதால் பயன்? கப்பல் அலைகளைக் கிழித்துச் செல்லலாம் ...... ஆனால் அவைகளை அழித்துச் செல்ல முடியாது. கட்டளையைத் தவறாதீர்கள் கடமையை நிறைவேற்றுங்கள். உங்களுக்கு நீங்களே துன்பத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டாம்.

முதல் கொலைஞன் : அம்மா! சொல்றத்த கேளுங்க. எப்படியாச்சும் ஒங்க உசுர காப்பாத்திக்கிங்க.

மங்கை : வாழ்வதற்கு இச்சை இருந்தாலல்லவா...நான் அப்படிச் செய்து கொள்ளவேண்டும். கொலைஞர்களே! என்னைத் தடுக்காதீர்கள். சாவு ... எனக்கு மிகவும் இனிப்பாக இருக்கிறது. என்னைச் சாகவையுங்கள். மரணங்கூட மனிதன் செய்து முடிக்கவேண்டிய கர்மங்களில் ஒன்றுதானே! அப்பா! ... சாவு ... வாழ்வதைப்போல அவ்வளவு

பயங்கரமான ஆபத்து நிரம்பியதல்ல. என்னைச் சாகவிடுங்கள். சுக்கிலத்தில் ஆரம்பமான சரீரம் ...என்றைக்கோ ஒருநாள் சாம்பலாகித்தானே தீர வேண்டும். வெட்டுங்கள்—சோதனையும், சந்தேகங்களும் உலவிக் கொண்டிருக்கும் இந்தச் சண்டாள பூமியை விட்டுப் புன்சிரிப்புடன் என் ஆவி...பிரேத உலகத்துக்குப் போகட்டும்! வெட்டுங்கள் ... அழுகையும் அவஸ்தைகளும் நிரம்பிய என் வாழ்க்கை ... இன்றோடு அஸ்தமிக்கவேண்டும். அதற்காக வெட்டுங்கள். பூக்களின்மேல் புரண்டு பழக்கப் பட்ட என் சரீரம் ... கழுகின் பாதங்களின் கீழ் புரளட்டும் ... அப்பா....என் அரசரின் ஆலிங்கனத்தால் வயிற்றிலிருக்கும் சிசு ... மனித உலகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் ...... என் மரண ரத்தத்திலேயே மரணமாகட்டும்! மண்ணும் மலையும் மௌனமாகத் தூங்குவதுபோல் நானும் தூங்கிவிடுகிறேன். தயவுசெய்து வெட்டிவிடுங்கள். நான் பிறந்த பூமியாவது என் ரத்தத்தால் குளிரட்டும்.

தேவி ! நான் புருவைப்போல் கபடமற்றவள். தர்மம் தவருதவள். ஆனல்...அரசாங்கம் சந்தேகப்பட்டு இதோ என்னைக் கொல்லப்போகிறது கொல்லட்டும். நான் சாவதைப் பார்த்தாவது இந்த சாம்ராஜ்யத்தின் மக்கள் சந்தோஷப் படட்டும். ஆனல் என்மீது வீணுகச் சந்தேகப்படும் அவர்களுக்கு ... நரகத்தில் முட்களைத் தவிர வேறு ஆகாரம் கிடைக்காது தாயே! ஆராயாமல் அவசரப்பட்டு, ஆத்திரத்தால் தீர்ப்பளித்த நீயும் ஒரு நீதியுள்ள அரசனு? அட பாபி ... என் கும்பி கொதிக்கக் கூறுகிறேன். சாவு லோகத்தில் ...

உனக்கு நெருப்புக் கட்டிகள்தான் படுக்கையாக இருக்கும்.

உதிரும்இந்தக் கண்ணீர்; என் உபத்ரவம்;நான் வைத்திருக்கும் ஆசைகள் அத்தனையும்...இன்னும் கொஞ்ச நேரத்தில் என்னோடு இறந்துபோகும் ... ஆனால் அக்னி சாட்சியாக என் மணாளர் கட்டிய... இந்த மாங்கல்யம் மாத்திரம் எந்தக் காலத்திலும் மரணமாகாது. ப்ரபு ... நீங்கள் எங்கிருக்கிறீர்கள். கருவிகரணங்கள் ஓய்ந்து ஒடுங்கட்போகும் இந்தக் கடைசி நேரத்தில்கூட உங்களைப் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேன். என் நேரம் நெருங்குகிறது. போகிறேன் ஸ்வாமி ... போகிறேன். சாவு என்னை அழைக்கிறது; அதன் சந்நிதானத்திலே சந்தோஷமாகத் தூங்கப்போகி றேன். நான் நிரபராதி என்பதை உலகத்தார்க்கு நிரூபிக்க முடியாமல்; பிறந்த மண்ணிலேயே புழுதி யாகிவிடப் போகிறேன். ஸ்வாமி — கடைசியாக உங்களை ஒன்று வேண்டிக்கொள்கிறேன். தாங்கள் என்றைக்காவது திரும்பிவந்தால் — மங்கையர்க் கரசி; சத்தியத்துக்காக வாழ்ந்து சந்தேகத்துக்காக இறந்து காட்டினாள் — என்பதை மனித ஜாதிக்குச் சொல்லுங்கள். அப்பா இனி தாமதம் வேண்டாம்.

[என்று சொல்ல, கொலைஞர்கள் அவளை வெட்ட, அவள் வெட்டுப்படாதது கண்டு பயந்து ஓடிவிடுகின்றனர். பிறகு]

**மங்கை :** அட தெய்வமே! அடிக்கடி துன்பத்துக்கே திரும்பிவரும் .... உலகமல்லவா இது! இதில், என்னை ஏன் இன்னும் நடமாட வைக்கிறாய்?

[என்று கூறி அவ்விடத்தை விட்டுப் புறப் பட்டுப் போகும்போது, இடைவழியில் பிரசவ

மாக. இதைக்கண்ட ஒரு மறவன் அவனைத் தன் குடிசைக்கு அழைத்துக் கொண்டு வருகிறான்.]

## காட்சி—16

### இடம்: காளிகோவில்

[காளிகோவிலில் பூஜை நடக்கிறது. பூசாரி மீது ஆவேசம் வர]

**பூசாரி:** அடே! எங்கடா சிசு பலி.

**ஒருவன்:** இதோ கொண்டாரேன் தாயே.
[என்று கூறி அவ்விடத்தை விட்டு, மறவன் குடிசையில் உள்ள மங்கையர்க்கரசியின் குழந்தையைப் பலி கொடுக்கத் தூக்கிக் கொண்டு போகிறான். பிறகு, மங்கையர்க்கரசி வந்து பார்க்க மகனைக் காணாமல் கதறிக் கொண்டு குடிசையைவிட்டு ஓடி, ஒரு மலை உச்சியிலிருந்து குதிக்கிறாள்.]

## காட்சி—17

### இடம்: அரண்மனை

[மதுராங்கதன் தூங்கிக் கொண்டிருக்கும் போது, காளி அவன் கனவில் தோன்றி]

**காளி:** ஏ ராஜன்! காட்டில் இருக்கும் என் கோவிலில் ... உனக்குப் பின்... பட்டத்துக்கு வரக்கூடிய ராஜபுத்ரன் ஆபத்தில் இருக்கிறான். சீக்கிரம் போ.

[என்று கூற, மன்னன் விழித்து]

**மதுராங்கதன்:** அம்பிகே! இது உன் அருளா? உன் உத்தரவா? இதோ வருகிறேன்.

[என்று கூறி, உடனே ரதத்தில் ஏறி வருகிறுன்.]

## காட்சி—18

### இடம் : காளிகோவில்

[காளி சந்நிதானத்தில் மங்கையர்க்கரசியின் குழந்தையை வெட்ட, பூசாரி கத்தியை ஓங்கு கிறுன். அப்போது, மறவன் ஓடிவந்து]

மறவன் : வேண்டாம் ... வேண்டாம். இந்தப் பச்சக் கொழந்தய பலி கொடுக்கவேண்டாம்.

பூசாரி : அடே ! இவனைக் கட்டுங்கடா.

[என்று சொல்ல அப்போது மதுராங்கதன் அங்கேவந்து பூசாரிமீது அம்பு எய்து குழந் தையைத் தூக்க, அப்போது]

மறவன் : மஹாராஜா ? இந்தக் கொழந்தய நான்தான் வளத்தேன். கொல்லவேண்டாமுன்னு தடுத்தேன். என்னைக் காப்பாத்துங்க.

மதுராங்கதன் : சரி, நீயும் என்னுடன் வா.

[என்று சொல்லி, அவனையும் அழைத்துக் கொண்டு போகிறுன்.]

## காட்சி—19

### இடம் : தெரு

[மலையிலிருந்து குதித்தும், அமர அமுதத்தின் சக்தியால் ஆவி பிரியாத மங்கையர்க்கரசி, ஒரு வீதி வழியாக அழுதுகொண்டு வர,

இதைக்கண்ட அவ்வூர் தாசி வஞ்சி அவளைப் பார்த்து]

**வஞ்சி :** நீ யாரம்மா ? ஏன் அழுவுறே ?

**மங்கையர்க்கரசி :** நான் ஒரு அநாதை.

**வஞ்சி :** ஐயோ பாவம் ! அழாதே. என் வூட்டுக்கு வாம்மா. என் மவளைப்போல ஒன்னைக் காப்பத்துறேன்.

[என்று மங்கையர்க்கரசியைத் தன் இல்லத்துக்கு அழைத்துக்கொண்டு வருகிறாள்.]

## காட்சி—20

### இடம் : மதுராங்கதன் அறை

[மதுராங்கதன், மந்திரி, ராணி வசந்தவதி, எல்லோரும் உட்கார்ந்திருக்கின்றனர். காளி கோவிலிலிருந்து எடுத்துவந்து வளர்க்கும் மன்னனின் வளர்ப்பு மகன் சிறுவன் சுதாமன், ராணியின் மடியில் அமர்ந்திருக்கிறான். சுதாமன் மன்னனைப் பார்த்து]

**சுதாமன் :** அப்பா...எனக்கு நேரமாகிறது. பகவானைப் பிரார்த்திக்கவேண்டும்.

**மதுரா :** சுதாமா பிரார்த்தனை ...... பாபத்தை வெல்லுகிறது.

**சுதா :** அது ஒருவனை, இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும் அழைத்துக்கொண்டு போகிறது.

**மதுரா :** சபாஷ்! மகனே! நீ ஒரு முத்து உள்ள கரும்பு.

**வசந்தவதி :** நட்சத்திரங்களின் சந்திரன்.

மந்திரி : சங்நேகமென்ன !

சுதா : அப்பா நான் பூஜைக்குப் போகிறேன்.

[என்று தன் அறைக்குவந்து பூஜை செய்ய, விளக்கு பெரிதாகிறது. சுதாமனும் பெரியவ ஞகிருன்.]

## காட்சி—21

இடம் : மதுராங்கதன் அறை

[மன்னன் தன் அறைக்குவந்த சுதாமனைப் பார்த்து]

மதுராங்கதன் : சுதாமா, இந்த ராஜ்யபாரத்தை இனி மேல் நீ ஒப்புக்கொள்.

சுதாமன் : அப்பா ! நானே வாலிபன். வஸ்துக்களிடம் சிக்கிரமாக வசப்படுபவன். இப்போதே எனக்கு ராஜ்யபாரமா ?

மதுரா : சுதாமா ......நானே, கண்ணிலிருக்கும் சொந்த வெளிச்சமெல்லாம் செலவழிந்துவரும் ...... கிழப் பருவம் அடைந்தவன். வயோதிகன் ... வாழ்ந்து அலுத்துவிட்டவன். இனிமேல் இந்தக் கிரீடத்தின் சுமையை என்னுல் தாங்கமுடியாது.

சுதா : அப்பா! நீங்கள் அனுபவமும், அரச பரிபாலன மும் நன்ருக அறிந்தவர்கள். உங்களாயேலே முடி யாது என்ருல்...மானிட எண்ணங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாதிருக்கும் இந்தப் பருவத்தில் என்னுல் நிர்வகிக்கமுடியுமா ? அப்பா, வைரம் பாய்ந்த மரத்தில் ஒரு மதயானையைக் கட்டி விடலாம். ஆனுல், வளைந்து கொடுக்கும் செடியில் ... ஒரு சாதுவான ஆட்டைக்கூட கட்டமுடியாது.

மதுரா : சுதாமா! உன் விவாதம் இனிமையாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் ...... இந்த அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியது உன் கடமை அல்லவா ?

சுதா : ஆம் ! என் கடமைதான். ஆனால் ... தாங்களும் தங்கள் மூதாதைகளும், மக்களை ஆயுள் வரைக்கும் அடிமைப்படுத்தி ஆண்டுவரும் ... இந்த சர்வாதிகார ஆட்சியை நான் விரும்பவில்லையப்பா.

மதுரா : அப்படி என்றால் ?

சுதா : இனிமேல்—ஒரு நாட்டை மகுடங்கள் ஆட்சி செய்யக்கூடாது. மக்களின் எண்ணங்கள்தான் ஆளவேண்டும்.

மதுரா : அப்போது ... பழைய சம்பிரதாயங்கள், கொள்கைகள் எல்லாம் ...

சுதா : பறந்துதான் போகும்.

மதுரா : அப்படி என்றால் ...... சர்வாதிகாரம் ... அரசனுக்கு தெய்வத்தால் கொடுக்கப்பட்ட வரமாயிற்றே ... அதன் கதி ?

சுதா : அது—இனிமேல் உயிரோடு உலவமுடியாது. இதுபோன்ற ஆதிகால ஞாபகமெல்லாம் ... அஸ்திவாரத்தோடு அழியவேண்டியதுதான்.

மதுரா : என்ன சொன்னாய் ? ஹூம் ! காலம் மாறி விட்டது.

சுதா : அதனால்தான் நாமும் மாறவேண்டும் என்று சொல்கிறேன். அப்பா ! இனி இங்கே ... எதேச்சதிகாரம் இருக்காது. பூலோக தெய்வங்கள், மன்னர்கள் என்ற பூச்சாண்டி பலிக்காது. ஆள்ப

வனும் அடிமையும் இருக்கமாட்டான். மக்கள் சிந்தனையை இருட்டாக்கி வைத்திருக்கும் மூட நம்பிக்கைகள் ...... உயர்வு, தாழ்வு என்ற வித்தியாசம், இவைகள் எல்லாம் ...... பூண்டோடு பொசுங்கிவிடும். அப்பா...இது புதுயுகம் பழமைகள்... படுசூரணமாகிவிடும். புதுமைகள் பூத்து மணம் வீசும்.

மதுரா : சுதாமா ! உணர்ந்தேன். சென்றுபோன நாட்களின் பழக்க வழக்கங்கள் ...... இனி நின்றுபோக வேண்டியதுதான். சரி, இன்று முதல் நாட்டின் நலங்கருதி அடிக்கடி மாறு வேடத்துடன் ... நகர் சோதனை செய்து வா.

[என்று கூற சுதாமன் போகிருன்]

## காட்சி—22

### இடம்; தாசி வீடு

[விஷ இருட்டில், சில காலிகள் மங்கையாக்கரசியைப் பலாத்காரமாக இழுத்துக் கொண்டு போவதை, நகர் சோதனை செய்துவரும் சுதாமன் கண்டு, அவர்களிடமிருந்து அவளைக் காப்பாற்றி, அவள் மீது மோகமடைந்து அரண்மனை திரும்புகிருன்.]

## காட்சி—23

### இடம் : அரண்மனைத் தோட்டம்

[சுதாமனும் அவன் நண்பன் ஜிவாம்ருதமும் ஒரு மரத்தின் பக்கத்தில் நின்றபடி]

சுதா : நண்பா......அன்று காப்பாற்றினேனே அந்தக் காம மோகினியை......

ஜீவா : ஐயையோ...! அவ ஒரு மோசமான தாசிப் பெண்.

சுதா : அதனுல் பரவாயில்லே. வண்டு எச்சில்படுத்திய மலர்களே, தெய்வங்கூட அல்லவா, மாலேயாக அணிந்து கொள்ள மனமார ஒப்புக் கொள்கிறது.

ஜீவா : இளவரசே! நீங்களே இப்படி நடக்க நினேக்க லாமா ! இது-பாபம்.

சுதா : இல்லே! வாலிபத்தின் பரவசம் !

ஜீவா : சொல்றதைக் கேளுங்க இது விபசாரம்.

சுதா : இது, என்போன்ற வேந்தர்க்கெல்லாம், கிண் ணத்துக்குள் புயல் வீசுவது போன்ற ஒரு சின்ன விஷயம். நண்பா! நட்சத்திரங்கள் சாகாத இன்றி ரவு நொச்சிப் பூக்கள் உதிரும் கடைசி யாமத்துக் குள், அவள் கரும்புத் தோளில் சாய்ந்து...கந்தர்வ லீலே புரியாவிட்டால் என் ஆவி நிச்சயம் நிலேக் காது. என் ஆசையை நிறைவேற்ற சீக்கிரம் ஏற்பாடு செய். புறப்படு.

ஜீவா : அப்ப...சரி இதோ போகிறேன்.

[என்று கூறிப் போகிருன்.]

## காட்சி–19

இடம் : தாசிவீடு

[நீல இரவு. ஓடும் சந்திரன் ஒட்டிக் கொண்டி ருக்கும் உல்லாசமான நேரம். வஞ்சி, சில நகை புடவை இவைகளேக கையில் வைத்தபடி, மங்கையர்க்கரசியைப் பார்த்து]

வஞ்சி : தங்கம், இதைப் போட்டுக்க, இந்தாப் பொடவை ஒறும்...சிங்காரிச்சிக்க.

மங்கை : அம்மா ! குப்பையில் கிடக்கும் என்னை இன்று கோபுரத்தில் வைக்கிறீர்களே. என்றுமில்லாமல், இன்று எனக்கு என்ன வாழ்வு வந்து விட்டது. அழுவதற்காகவே பிறந்துவிட்ட எனக்கு இந்த அலங்காரம், ஆடம்பரம் இதெல்லாம் எதற்கம்மா ?

வஞ்சி : எதுக்கா? இன்னங் கொஞ்ச நேரத்துலே நம்ப தேசத்து இளவரசர் இங்கே வரப்போகிருர். அதுவும் ஒன்னப் பாக்கத்தான்.

மங்கை : என்ன ! இளவரசரா? புனிதமான செங்கோலைத் தாங்கும புவிராஜனு? என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிய, அந்தப் புண்ணிய புருஷரா?

வஞ்சி : ஆமாம். அவரே தான்.

மங்கை : என்ன ! பாராளும் வேந்தரா, இந்தப் பேதையைப் பார்க்கப் பாதி ராத்திரியில் வரப்போகிருர்?

[என்று கூறும் போது, இளவரசன் வந்து கதவைத்தட்ட, வஞ்சியும் மாமாவும் அவனை வரவேற்று ஆலிங்கன அறைக்கு அனுப்ப, சுதாமனைப் பார்த்து மங்கையர்க்கரசி வணங்கியபடி]

மங்கை : வாருங்கள். இப்படி அமருங்கள் அரசே ! நீங்கள்...சமயத்தில் செய்த உதவியை... நான் சாகும் வரையிலும் மறக்கமாட்டேன். நீங்கள் ஒரு வீரனுக விளங்கினீர்கள்...அதற்காக ஆனந்தப்படுகிறேன். என் துன்பத்தைத் துடைத்தீர்கள்... அதற்காகத் தலைவணங்குகிறேன். என்னை ஆபத்திலி

ருந்து காப்பாற்றினீர்கள். அதற்காக நன்றி செலுத்துகிறேன்.

சுதா: ஆபத்தில் உதவி செய்வது மனித தர்மம். அதிலும் நான் அரசன். செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன்.

மங்கை: நீங்கள்....கடமையாகக் கருதலாம். ஆனால் நான் அதை எனக்காக நீங்கள் செய்த தியாகம் என்றே எண்ணுகிறேன்.

சுதா: உன்னைப் போன்ற கட்டழகியைச் சந்திப்பதற்குக்...கடவுள் எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தாரே என்பதற்காக... நான் சந்தோஷப்படுகிறேன். உன் அழகு லாவண்யம்... என் இருதயத்தைப் புது வசநதமாக்கிவிட்டது. ஆஹா! அழகு என்பது...

மங்கை: கண்ணுக்கு வரும் போதை!

சுதா: அது—சந்தோஷத்தையும், சாந்தத்தையும் உண்டாக்குகிறது.

மங்கை: இல்லை இல்லை—அழகு சஞ்சலத்தையும், சாவையுந்தான் சிருஷ்டிக்கிறது.

சுதா: நீ மிகவும் நன்ருகப் பேசத் தெரிந்திருக்கிருய். அறிவும் அழகும் உள்ள உன்னைப் பார்க்கும் போது... எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது தெரியுமா?

மங்கை: உங்களுக்கு மட்டுமா என்ன! எனக்குங்கூட உங்கள் மீது ஒருவிதமான அன்பு ஏற்படுகிறது.

சுதா: ஆஹா! உன் நெஞ்சம் என் நெஞ்சமாகவே ஆகிவிட்டது. அன்பே... இப்போது, நாம் ஒரே

பறவையின் இரண்டு இறக்கைகளாகி விட்டோம். இனிமேல், நீ அங்கே ஏன் ஒதுங்கி நிற்கிறாய். கண்ணே! உன் பொன் பர்வதத்தில் புஷ்பிக்கலாம் என்று—பூரித்திருக்கிறேன். உன் ஓவிய உதட்டில்... அந்திவானமாகத் தூங்க ஆசைப்படுகிறேன். உன் கண்ணுக்குள்... கருமணியாக வேண்டுமென்று நான் காத்திருக்கிறேன். அலையில் பிறவாத அமுதமே!...என் அருகில் வா.

மங்கை : புனிதமான செங்கோலைத் தாங்க வேண்டிய... புவி ராஜன்தானா நீங்கள்?

சுதா : ஆம் பாராளும் மன்னரையெல்லாம்... என் பாதத்தில் வணங்கச் செய்யும்... இந்நாட்டின் இளவரசன் நான்தான். இனிமேல் நீதான் என் மகுடத்தை அலங்கரிக்க வேண்டிய மஹாராணி! அன்பே! இந்தச் சுடாத இரவில், அன்னத்தின் இறகுகளால் சிருஷ்டிக்கப்பட்ட மஞ்சத்தில் படுத்து, மான் விழியால் கதைபேசி மன்மத நித்திரை செய்வோம் வா!

மங்கை : இளவரசே! நீங்கள், பிரஜைகளின் பிதா அல்லவா. பெண்களை பெற்ற தாயாகவும், சொந்த சகோதரியாகவும் கருதவேண்டிய நீங்களா இப்படி விபரீதமாக நடந்து கொள்வது? வேண்டாம்.

சுதா : வேண்டவே வேண்டாம். உன் தேன் முத்தங்களைத்தவிர எனக்குத் தேவேந்திரப் பட்டம் கிடைப்பதானாலும் வேண்டாம்.

மங்கை : மன்னனே! மனுநீதி தவறாமல் ஆட்சி செய்ய வேண்டிய உங்களுக்கா இந்த மயக்கம்? யுவராஜா! ஸ்பரிசத்தால் யானையும்; ரூபத்தால் விட்டில் பூச்சி

யும்; வாசனையால் வண்டுகளும் மாண்டு மடிவதைப்போல்...கேவலம் அசங்கியமான காமத்தால் அழிந்துவிடப் பார்க்கிறீர்களே! அரசே! தெய்வ தர்மத்தை மறந்து... இப்படிப்பட்ட சரீர பாபம் செய்வதால் அல்லவா நரகத்துக்கு இன்னும் ஆயுள் நீடிக்கிறது. மேலும்... பாபத்தின் பிரதி நிதியாக விளங்கும் விபசாரத்தில் ஈடுபட்டால் தர்மம்... உங்களைச் சிம்மாசனத்திலிருந்து தள்ளி விடும் அரசே.

சுதா : பரவாயில்லை. இந்த சாம்ராஜ்யம் எனக்குக் கொடுத்திருக்கும் கிரீடத்தையும், வாளையும், உன் புன்சிரிப்புக்காக இப்போதே தூக்கி எறியத்தயா ராக இருக்கிறேன்.

மங்கை : வேந்தே...நான் வெட்கம், ரோஷம், மானம், மட்டுமரியாதை விவஸ்தை இவைகளை இழந்து வாழ விரும்பும் தாசியல்ல! மரணம் வரையிலும் மானத்துடன் இருக்க ஆசைப்படும் மங்கை நான். பாபத்துக்கு பயப்படுபவள். கர்மங்களால் சத்தியம் தவறுமல்—கால வித்தியாசத்தால் இருக்கதிக்குள் ஆளான என்கதை...கண்ணீர் நிறைந்தது.

சுதா : அதை மாற்றி உனக்கு ஆனந்தம் உண்டாக்கத் தானே—இந்த அர்த்த ராத்திரியில் வந்திருக்கிறேன்

மங்கை : யுவராஜா!...சன்மார்க்கத்தை ஸ்தாபிக்க வேண்டிய நீங்கள் தாசிவீட்டுக்கு வந்திருப்பது சரியல்ல. இளவரசே! சொல்வதைக் கேளுங்கள். எட்டிப்பழத்தின் வெளிவர்ணத்தைக் கண்டு ஏமாற வேண்டாம். தாசி யார் தெரியுமா? தெரிந்தால் இங்கே வந்திருப்பீரா? தாசி—வீதியில் போவோரை வலிய அழைத்து... ஈரமாகப் பேசி ஏமாற்றும்

வஞ்சகி. அவள் சரீரம்—பலபேர் மிதிக்கும் படித் துறை. உதடு – தாகவிடாய் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தல். அவள் வீடு ஒரு சந்தைக்கடை. வேந்தே! சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சகல நரகங்களும் உற்பத்தியாகும் இடமல்லவா இது. இங்கே நின்றாலே பாபம் ஒட்டிக்கொள்ளும். தயவு செய்து போய் விடுங்கள்.

சுதா: போவதா? உன் காவிய உதட்டில் கந்தர்வரசம் பருகாமல் போவதா? நீ இல்லாமல் இனிமேல் என் நீலவிழிக்கு நித்திரையே வராது கண்ணே! காம போகத்தை அனுபவிக்கக் கடவுள் உண்டாக்கி யிருக்கும் இரவு நேரத்தில், உன் ஸ்பரிசத்தால் என்னைப் பரசவமாக்கு! எங்கே...

[என்று கூறி அவளைத் தழுவுவதற்கு நெருங் கும்போது, அவள் மார்பிலிருந்து பால் சுரந்து அவன்மீது அடிக்கிறது. இதைப் பார்த்து பீதியடைந்து சுதாமன் ஓடுகிறான்.]

## காட்சி—25

### இடம்: அரண்மனை

[அரண்மனையில், மங்கையர்க்கரசியின் படத்தைக் கண்டு மந்திரியைப் பார்த்து]

சுதா: இது யாருடைய படம்?

மந்திரி: இவள்தான்...முன்பு இந்நாட்டு இளவரசியாக இருந்த...மங்கையர்க்கரசி. பாபம்! விபசாரியாகி விட்டாள். அதற்காக...மரண தண்டனை விதிக்கப் பட்டு...மாண்டு மண்ணோடு மண்ணாகி விட்டாள்.

சுதா: நிஜமாகவே இறந்துவிட்டாளா?

மங் : ஆம்! நிச்சயமாகவே இறந்துவிட்டாள்.

சுதா : அதுதான் இல்லை. இவள் சாகவில்லை. இவளுக்கிருந்த மரணந்தான் செத்துவிட்டது. இவள் இன்னும் உயிருடன்தான் இருக்கிறாள்.

மங் : இருக்காது இளவரசே!

சுதா : அப்படி இவள் உயிருடன் இருந்தால்?

மங் : இவளுக்கும், இவளுக்கு உடந்தையாக இருப்பவர்களுக்கும் தக்க தண்டனை விதித்தே தீர வேண்டும்.

சுதா : இப்போது, இவள் இந்நாட்டில் உள்ள தாசி வஞ்சி வீட்டில் வசித்து வருகிறாள். இவளையும் இவளைச் சேர்ந்தவர்களையும்...உடனே கைது செய்யும்

[என்று கூற அமைச்சன் போகிறான்.]

## காட்சி—26

### இடம் : தாசி வீடு

[வஞ்சியும், மாமாவும் கூடத்தில் நிற்கின்றனர். அப்போது மங்கையர்க்கரசி அறையிலிருந்து வெளியே வந்தபடி]

மங்கையர்க்கரசி : அம்மா.

வஞ்சி : அம்மா என்னடி அம்மா. ஆசையா வந்த இளவரசனை அடிச்சி வெரட்டினியடி சண்டாளி. போடி வெளியே.

[என்று மங்கையர்க்கரசியைப் பிடித்துத் தள்ள, அவள் சிந்திய கண்ணீருடன்]

**மங்கை :** அம்மா. நிக்கற்ற என்னை இப்படி திடீரென்று விரட்டுகிறீர்களே. நான் உங்கள் வயிற்றில் பிறக்காவிட்டாலும் ஆறுதல் அளித்துக் காப்பாற்றிய நீங்களும் எனக்கு ஒரு அன்னை அல்லவா? நான் தங்கள் மகள் அல்லவா தாயே...தாயே.

**வஞ்சி :** தாயாவது—மகளாவது போடீன்னு.

**மங்கை :** என் பாபத்தின்பொழுது...இன்னுமா அஸ்தமிக்கவில்லை. தேவி! நான் படும் வேதனையைக் கண்டு இந்நேரம்...பசையற்ற பாராங்கல் கூட பரிதாபப்பட்டிருக்குமே! உன்னையே சதா பூஜிக்கும் என் மீது...உனக்கு இரக்கங்கிடையாதா? ஆற்றில் தத்தளிப்பவனை.. அவன் பகைவன்கூட பார்த்துக் கொண்டிருக்க மாட்டானே! தாயே! உப்புக் கரிக்கும் அழுகையும்—உபத்ரவங்களும் அளிப்பது தான், உன் தர்மமா? இல்லை—அலை அலையாய் அடிக்கும் துன்பத்தில்...நான் எப்போதும், அவஸ்தைப் படவேண்டும் என்பதுதான் என் தலைவிதியா? ஈஸ்வரி—பாபங்கள் செய்ய பயப்படாத இப்பிரபஞ்சத்தில்—என்னை உயிரோடு வைத்து இன்னும் ஏன் சித்ரவதை செய்கிறாய். ஐயோ! கல்லுங் கர்ஜனையும் நிரம்பிய காட்டில், நான் அன்றைக்கே செத்திருந்தால், என் ரத்தத்தின் ஈரத்தில்...புல்லும் பூண்டுமாவது, செழிபாக வளர்ந்திருக்குமே!

[என்று கதறிக் கொண்டிருக்கும்போது, அரசாங்க சேவகன் வந்து]

**சேவகன் :** எல்லோரையும் கைது செய்து அழைத்து வரும்படி அரசாங்கத்தின் உத்தரவு.

[என்று கூறி எல்லோரையும் அழைத்துக் கொண்டு போகிறான்.]

## காட்சி—27

இடம் : கந்தர்வலோகம்

[காந்தருபன் கனவில்; மங்கையர்க்கரசி முக்காடிட்டபடி, ஒரு குளக்கரையின் பக்கம் வர, அவளைப் பார்த்து]

காந்தருபன் : கண்ணே! தெய்வருபத்தைத் திரையிட்டு மறைப்பானேன்! ஓஹோ! உன் வதனத்தின் விசித்திரங்களை...வானம் திருடிக்கொள்ளுமென்ரு? அதிருக்கட்டும்—இப்படி வெகு நேரங்கழித்து வருகிருயே! என்னை விரகத்தால் வேதனைப்படுத்த வேண்டும் என்பதுதானே உன் விருப்பம்?

மங்கையர்க்கரசி : இல்லை ப்ரபு! உங்களைத் துன்பப் படுத்த, என் இதயம் இடந்தருமா? ஸ்வாமி! வானம், இப்போதுதான் என் விழிகளுக்கு, வர்ணம் வைத்தது. பளிங்கு ஓடை, இப்போதுதான் என் பாதச் சிலம்புகளுக்குப் பாடல் கற்றுக் கொடுத்தது. காயாம்பூவிடம் கன்னம் கொஞ்ச நேரம் கதை பேசிக்கொண்டிருந்தது.

காந்த : நட்சத்திரங்கள் உன்னை, நாட்டியமாடச் சொல்லியிருக்கும். சந்தனச் சந்திரன், உன்னைச் சங்கீதம் பாடச் சொல்லியிருக்கும்...ஏன்! அப்படித் தானே!

மங்கை : போங்கள்! எதற்கெடுத்தாலும் கேலிதான்!

காந்த : அடேயப்பா! வந்துவிட்டதா? மங்கையர்க்கரசி கோபம் கொஞ்ச நேரம் உள்ள பைத்தியம் என்பதை நீ அடிக்கடி மறந்துவிடுகிருய். இந்தக்

கொஞ்சலான வார்த்தைகளுக்கே இவ்வளவு கோபமா?

[என்று அவள் கன்னத்தை தடவ]

மங்கை : ஸ்வாமி! வானம், இந்தத் தடாகத்தில் தன் முகத்தைப் பார்த்துக் கொள்கிறது.

காந்த : நானும், உன் கன்னத்தில் என் முகத்தைப் பார்த்துக் கொள்கிறேன்.

மங்கை : ப்ரபு, அதோ பாருங்கள். என் புன்சிரிப்பில் ருதுவான அந்த புஷ்பம்...

காந்த : அழகாக இருப்பதால் வண்டுகளிடம் அகப் பட்டுக்கொண்டு அவஸ்தைப்படுகிறது. அழகான வஸ்துவுக்கு எப்போதுமே ஆபத்துதான். அது அபாயத்திலிருந்து தப்ப முடியாது.

மங்கை : ஏன்? அந்த ரோஜா புஷ்பம் ஆபத்திலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள அதன் அடியில் முட்களை வைத்திருக்கவில்லையா?

காந்த : உண்மைதான்! ஆனல், அந்த முட்களால் தேனைக் குடிக்கவரும் வண்டுகளைத் துரத்த முடிவதில்லை.

மங்கை : ப்ரபு, இப்படி எல்லாம் விசித்திரமாகப் பேச...

காந்த : எனக்குக் காவியங்கள் கற்றுக்கொடுக்கவில்லை. உன் கண்கள்தான்.

[என்று கூற மங்கையர்க்கரசி அவன் மடியில் படுத்தபடி]

மங்கை : ப்ரபு ... மன்மதன் நம்மீது ... புஷ்பங்களால் போர் செய்யும் இந்த போதையான நேரத்தில் இனிப்பாக இன்னும் ஏதாவது சொல்லுங்களேன்!

காந்த : கண்ணே! ஓராயிரம் காதற் கதைகளை அள்ளித் தரும் உன் உதட்டின் ஒவியத்தை...ஜோதி அஸ்த மனம் ஜெபிக்க முடியுமா? உன் சங்கீதப் பேச்சின் இனிமையை—செங்கோட்டி யாழ்தான் சிருஷ்டிக் குமா? உன் கண்களிடம் நான் கற்றுக்கொள்ளும் கலாமந்திரங்களைக்—காதல் கிரந்தங்களில் காண முடியுமா? கண்ணாடி மண்டலம் போன்ற உன் கை நகங்களின் வெளிச்சத்தை வானத்தில் குடி யிருக்கும் வெண்ணிலாவில் பார்க்க முடியுமா?

மங்கை : ஸ்வாமி! நினைவுகள் மௌனமடைந்தால்—ஞானியாகலாம். நம் இன்பம் மௌனமடைந்தால் நாமே ஸ்வர்க்கமாகிவிடலாம்!

காந்த : கண்ணே! உலகத்தில் மிகவும் மயக்கமான வஸ்து—மது என்று எந்த மடையனோ தெரியாமல் எழுதி வைத்து விட்டான். உண்மையாகவே பிரபஞ்சத்தில் மிகவும் போதையான பொருள் பெண்தான்.

மங்கை : ப்ரபு...இந்த மலர்களுக்கு மட்டும் பேசத் தெரிந்திருந்தால்...

காந்த : நம் போக ரகஸ்யங்களைப் பொன்வண்டு களிடம் விநோதமாக வெளிப்படுத்திவிடும்.

மங்கை : உங்களையும் இந்த இனிமையான ஸ்பரிசத்தை யும் தவிர—உலகத்தில் நான் வேறு ஒன்றையும் வேண்டேன் ஸ்வாமி.

காந்த : அன்பே! நான் அடுத்த ஜன்மத்தில்—ஒரு புல்லாகப் பிறந்துவிட்டால்...

மங்கை : அதன்மேல் நான் ஒரு பனித்துளியாக இருந்துவிடுவேன் ப்ரபு!

காந்த : கண்ணே!

மங்கை : ஸ்வாமி!

## காட்சி—28

இடம் : நீதி மன்றம்

[ஆசனங்களில் மதுராங்கதன், மந்திரிகள், நாககேது, புலிகேசி, சுதாமன் முதலானவர்கள் அமர்ந்திருக்கப் பக்கத்தில் மறவன் நிற்கிறான். வஞ்சி, மாமா, கொலைஞர்கள் எல்லோரும் ஒரு புறத்தில் நிற்க, மங்கையர்க்கரசி குற்றவாளிக் கூண்டில் முக்காடிட்டபடி நிற்கிறாள். மன்னன் மங்கையர்க்கரசியைப் பார்த்து]

மதுராங்கதன் : பெண்ணே! நீ யார்? உன் பெயர்?

மங்கையர்க்கரசி : மஹாராஜா...நான் ஒரு அனாதை. என் பெயர்...அதைச் சொல்லுவதால் ஒருவருக்கும் ஒரு பயனுமில்லை.

சுதாமன் : என்ன கண்ணியமாகக் கதைக்கிறாள். அப்பா! இவள் கைதேர்ந்த ஒரு கணிகை மகள். ஒரு வேசி வீட்டில்தான்...இவளை நான் நகர் சோதனை செய்யும்போது சந்தித்தேன். இவளால் நகரத்து வாலிபர்களே நாசமாகிவிடுவார்கள்.

நாகு : ராஜ சபையில் முகத்திரை எதற்கம்மா?

மங்கை : நான் ஒரு பெண். என் முகத்தை என் கணவர் தவிர வேறு யாரும் பார்க்க உரிமை கிடையாது.

இந்த உரிமையைக் கூடவா மன்னர் பறிக்க நினைக்கிருர்.

சுதா : கணவன்! நல்ல ஜாலக்காரி இவள். முகங்காட்டி முத்துநகை காட்டி, சித்து விளையாடிச் சீமான் களின் செல்வத்தைச் சூறையாடும் இவள்...மணுள னைத் தவிர மற்றெவர்க்கும் முகத்தைக் காட்ட மாட்டாளாம்! மஹாராஜா! இவள், வாலிபத்தில் புஷ்பத்தைப் போலவும், வயோதிகத்தில் பழத் தைப் போலவும் இருக்க இச்சைப்படும் ஒரு வேசி. இந்தப் புனிதவதியின் திருமுகத்தைத் தாங்களே பாருங்கள்.

[என்றுகூறித் தன் வாளால் அவள் முகத் திரையை எடுத்து]

சுதா : அப்பா! இவள்தான் இந்த மஹாராஜ்யத் தின் மானத்தைக் கெடுத்த மங்கையர்க்கரசி.

மதுரா : என்ன! மங்கையர்க்கரசியா? அவளாயிருக்க முடியாது. எங்கேயாவது வீழ்ந்த நட்சத்திரம் விண்ணுக்குத் தாவுவ துண்டா? அவளுடைய மக்கிப்போன எலும்புகள்கூட, காலாந்தரத்தில் கல்லாக மாறியிருக்குமே. அச்சண்டாளியாவது இன்னும் சாகாமல் இருப்பதாவது!

நாகு : இளவரசர் பிதற்றுகிருர்.

புலிகேசி : இல்லை. நிழலைக் கண்டுபிடிக்க வெளிச் சத்தை ஏற்றுகிருர்.

மதுரா : சுதாமா...இந்தப் பெண், மங்கையர்க்கரசி தான் என்பதற்கு என்ன ஆதாரம்?

சுதா : இளவரசியின் படத்தைப் போன்றிருக்கும், இவள் உருவமே இதற்கு அத்தாட்சி.

நாகசு : உப்பும் கற்பூரமும் உருவத்தில் ஒன்ருகத்தான் இருக்கிறது. அதற்காக, இரண்டும் ஒரே பொருளாகிவிடுமா? மஹாராஜா...இது ஏதோ இந்திர ஜாலமாக இருக்கிறது. எதற்கும் கொலையாளிகளை விசாரிப்போம்.

மதுரா : கொலைஞர்களே! கொலை செய்யக் கொண்டு போன மங்கையர்க்கரசியை என்ன செய்தீர்கள்?

கொலையாளிகள் : ராணி அம்மாவ வெட்டுனம். வெட்டுப் படல்லே. உட்டுட்டு நாங்க ஓடியாந்துட்டோம் மஹாராஜா.

மதுரா : முழுப் பொய்யர்கள். இதில் ஏதோ சூதிருக்கிறது.

[என்று கூறி மங்கையர்க்கரசியை பார்த்து]

மதுரா : உண்மையாக நீ மங்கையர்க்கரசி தானு?

மங்கை : ஆம்! இந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் தங்கள் மருமகள் மங்கையர்க்கரசி நான்தான்.

மதுரா : ஆ!...மங்கையர்க்கரசி...

புலிகேசி : மண்ணில் விழுந்திருக்க வேண்டிய மழைத் துளி.

மங்கை : சிப்பியில் விழுந்து விட்டது. அதனுல் என்ன முத்தாகத்தானே பிறக்கும்.

சுதா : அரச ஆக்கினைக்கும், இந்நாட்டின் ஆயுதங்களின் கூர்மைக்கும் இவளுக்கு பயமிருந்தால் இப்படிப் பேசுவாளா மஹாராஜா?

மதுரா : மாயக்காரி. உன்னை இன்னுமா பூமி விழுங்காமல் விட்டு வைத்திருக்கிறது. மாமிச பலவீனத்தினால் உற்பத்தியாகும் காம இச்சையில் மதிமயங்கி, பதி தர்மத்தையே பாழ்படுத்திய பாபி. இந்தக் கிரீட வம்சத்தின் கௌரவத்தையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டாயே, கிராதகி! இத்தனை ஆண்டுகளாகியும், அன்று கண்ட மேனி இன்னும் அழியாமல் அப்படியே இருக்கிறதே! நஞ்சு—ஒரே ரூபத்தில் நாசப்படுத்தும். உன் சதிக்கு எத்தனை ரூப ஜாலங்கள். சண்டாளி! உன்னை நானே சித்ரவதை செய்கிறேன்.

[என்று கூறி அவளை வெட்டுவதற்கு வாளை ஓங்க.]

மங்கை: ஆத்திரப்படாதீர்கள் அரசே! இந்த மஹாராஜ்யத்தில், மன்னனுக்கு ஒரு நீதியும், மற்றொருவருக்கு ஒரு நீதியும் இல்லையே?

மதுரா : இல்லை. ஆராய்ச்சி மணியின் நாக்கு அசையாமல் ஆட்சி செய்யும் இந்த மதுராங்கதன் கொற்றத்தில் மாந்தர்க்கெல்லாம் ஒரே நீதிதான்.

மங்கை : அப்படி என்றால்—கள்ளத்தனமாக ஒரு பெண்ணைக் கற்பழிக்க வந்தவன், மன்னன் என்றாலும் குற்றவாளிதானே மகாராஜா?.

மதுரா : ஆம்! விஷம்...வேந்தனுக்கு மட்டும் அமுதமாகுமா?

மங்கை : நல்லது அரசே!...உங்கள் இளவரசர் இவர்தானே ?

மதுரா : ஆம் !

மங்கை : ஓஹோ ! செங்கோலின் முகம் சாயாமல் ஆள வேண்டிய...சிம்மாசன வேந்தர் இவர்தானா? வீரத்தால் சத்துருக்களை வென்று விவேகத்தால், தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய, இந்நாட்டின் இளவரசர் இவர்தானா? மன்னுயிரையும் தன்னுயிராகக் காத்து, நீதி தள்ளாடாமல் ஆட்சி செலுத்த வேண்டிய—இளவரசர் இவர் தானா?

புலிகேசி : ஆம்! சத்தியத்துக்குச் சாட்சியாக இருந்து வரும் இந்தச் சர்ப்புத்திரர்தான் இத்தேசத்தின் இளவரசர்.

மங்கை ; சர்ப்புத்திரர்...அர்த்த ராத்திரியில் வந்து, களங்கமற்ற ஒரு பெண்ணைக் கைப்பிடித்து இழுக்க வந்தவர் சர்ப்புத்திரர். மானத்தோடு வாழும் ஒருத்தியிடம், தன்பட்டம் பதவிகளைப் பிரஸ்தாபித்து, மையலுக்கு அழைப்பவர் சர்ப்புத்திரர். நகர் சோதனை செய்வதாகச் சொல்லி ஒரு நங்கையின்கற்பைக் கபளீகரம் செய்ய வந்தவர் சர்ப்புத்திரர்.

மதுரா : யார் ? சுதாமனா !

மங்கை : ஆம்! இவர் பொன் கொடுத்து, நேற்றிரவு என்னிடம் போகத்துக்காக வந்தது; நீதி கூறியும், நிராகரித்தது; ஒப்புக்கொள்ள மறுத்த என்னை, உபத்ரவப்படுத்த முயன்றது; இதெல்லாம் உண்டா இல்லையா என்று, உங்கள் சர்ப்புத்திரரையே கேளுங்கள் ?

சுதா : அப்பா! இது...நிஜம் நெருங்க முடியாத பொய். இவளை நான் கண்டு பிடித்துவிட்டேன் என்பதற்காக, என்மீது கதை ஜோடிக்கிறாள்.

புலிகேசி : அப்படித்தான் இருக்க வேண்டும்.

சுதா : அப்பா! இவள் பேச்சை நம்பவே நம்பாதீர்கள்.

மதுரா : அப்போது.. உன் வார்த்தையை மட்டும் நான் நம்ப வேண்டுமா ?

சுதா : ஆம் ! நான் மன்னன்.

நாசு : அதனால் என்ன ... மாமிச ருசியில் தடுமாறி விழக்கூடிய நீங்களும், ஒரு மனிதன் தானே !

சுதா : நான், புனிதமானவன்.

நாசு : இப்படிப் பிரஜைகள் அல்லவா அழைக்க வேண்டும்.

மதுரா : வஞ்சி! இந்தப் பெண் சொல்வதெல்லாம் ...

வஞ்சி : வாஸ்தவந்தாங்க.

பஞ் : ஆமாம் மஹாராஜா.

மதுரா : இப்போது என்ன சொல்கிறாய்.

[என்று கேட்கச் சுதாமன் தலைகுனிந்து குற்றவாளிக் கூண்டில் ஏறியபடி]

சுதா : வேலிக்கு இட்டமுள் என் காலுக்கே வந்து விட்டது.

நாசு : புலிகேசி! பரிந்து பேசினீரே இப்போது பார்த்தீரா? கண்ணாடி, இருட்டையும் பிரதிபலித்துக் காட்டுமென்று ஏமாந்து விட்டார் இளவரசர்.

மதுரா : அடே பாவி. இந்த நாட்டின் வருங்கால நீதிமானாக விளங்குவாய் என்றல்லவா நினைத்திருந்தேன். அதை நொடியில் பாழடித்து விட்டாயே கொடிய துரோகி.

சுதா : தந்தையே! நான்...

மதுரா : ச்சீ. வாயை மூடு. எட்டிப் பழத்தைத் தேன் குடத்தில் வைத்து... அது இனிப்பைத் தரும் என்று எண்ணி ஏமாந்துவிட்டேன். வண்டலைச் சந்தனச் மென்று நம்பி, விவேகமிழந்தேன். கடல் நீரைத் குடி தண்ணீர் என்று நினைத்துக் கருத்திழந்தேன். கள்ளன்; கபடன்; முறை தவறி நடக்கும் மிருகத் திலும் இழிந்தவன்.

சுதா : அப்பா ...

மதுரா : அப்பா என்று அழைத்து, இன்னும் எனக்கு ஆத்திரத்தை மூட்டாதே. அயோக்யா! அதர்மங் களுக்குத் தலைமை வகிக்கும் ... உன் கைக்கு ஒரு செங்கோலா? சத்தியங் கெட்டுப்போன உன்னைத் தாங்க ஒரு சிம்மாசனமா?

சுதா : வேந்தே ... களங்கமுள்ள சந்திரனை ...

மதுரா : ஆடை அணியத் தெரியாத ஆகாயம் ஏற்றுக் கொள்ளும். ஆனால் இந்த நீதி ராஜ்யம், உன் போன்ற நீசனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. பிரதானிகளே! ஏற்கெனவே நம்மால் கொடுக்கப் பட்ட மரண தண்டனையிலிருந்து தப்பித்து, மறு படியும் நம்மிடமே அகப்பட்டுக்கொண்ட இந்த நீலிகளும்; நீதியை நிலைநிறுத்த வேண்டிய மன்ன னாக இருந்தும், சோரத்தனம் செய்ய இச்சைப்பட்ட இவனுக்கும் என்ன தண்டனை விதிக்கலாம் என் பதை நீங்களே சொல்லுங்கள்.

மறவன் : மஹாராஜா ! ஒரு வார்த்தை.

மதுரா : என்ன ?

மறவன் : நம் இளவரசர் இந்தம்மாவோட பிள்ளைதாங்க.

மதுரா : என்ன ! ... இது நிஜந்தானா ?

மறவன் : காட்டிலே பிரசவிச்சிக் கஷ்டப்பட்டுகிட்டு இருந்த இவுங்கள நான்தான் காப்பாத்துனேன். காளி பலிக்குக் கொண்டாந்தது இவுங்க கொழந்தயதாங்க.

மதுரா : ஆ! இந்த விலைமகளுக்குப் பிறந்தவனா இவன்! சரிதான் ... இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

சுதா : என்ன! தொட்ட புருஷனுக்குத் துரோகம்செய்த நீயா என் தாய் ?

மங்கை : நீயா ! என் சொந்த மார்பின் திவலையை உண்டு வளர்ந்த செல்வமகன் ?

மதுரா : ஆம் ! உன் மகன்தான். என் குலப்பெருமையை தாயும் மகனும் சேர்ந்தல்லவோ குலைத்து விட்டீர்கள்.

சுதா : தாயா? நிஜமாகவே நீ என் தாயா? என்ன பாதகம் செய்யத் துணிந்தேன். ஆஹா ! அநீதிகூட அங்கீகரிக்க முடியாத அதர்மமல்லவா செய்து விட்டேன். என்போன்ற பாபிக்கு, நரகங்கூட நிற்பதற்கு இடந்தராதே. சண்டாளி ! ...... உன் சிற்றின்ப இச்சையின் சின்னமா நான் ? உன் அற்ப ஆசையின் அடையாளமா நான்? உன் காம ஆவேசத்தின் கருவா நான் ?... என்ன ? நான் ஒரு ஒரு விபசாரியின் மகனா ?

மங்கை : மகனே ! நான் மாசற்றவள். நெருப்புச் சூரியன்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நான் நிரபராதி.

மதுரா : கவியுடன் காம நித்திரைசெய்த இந்தக் கள்ளி, ஆணையிட்டு ஆளைவேறு மிரட்டுகிறாள்! விபசாரி.

மங்கை : ஆ! நானா விபசாரி? புருஷனை இழந்த நேரத்திலிருந்து, பொட்டும் புஷ்பமும் இழந்து, கொட்டும் இந்தக் கண்ணீருடன், ஒரு கருகிய மொட்டைப்போல், காலத்தைக் கழித்துவரும் நானா விபசாரி? நீலவிழியில் தோன்றி நித்திரைக்குள்ளேயே செத்துப்போகும் சொர்ப்பனத்தில்கூட சோரம் போகாத நானா விபசாரி? மகனே! இந்தப் பரிசுத்தமான மாங்கல்யத்தைப் பாதுகாப்பவள் விபசாரியா?

மதுரா : பத்தினி தர்மம் பேசுகிறாள், இந்தப் பதிவிரதா சிரோன்மணி.

சுதா : பரபுருஷர்களின் ஆலிங்கனத்தால் பாழ்பட்ட நீ, அலங்கார வார்த்தைகளால், உன் அயோக்கியத்தனத்தை மறைத்துக் கொள்ளப் பார்க்கிறாயா?

மங்கை : மகனே! பரம்பரை பரம்பரையாக, பரிசுத்தங் கெடாமல் வந்துகொண்டிருக்கும் இந்தப் பத்மினி ஜாதி, ரத்தத்தைப் பாழ்படுத்தவில்லை என்பதை நம்பு. பிறைச்சந்திரன் களங்கத்தை ஏற்காது என்பதை நம்பு. மகதநாட்டு மன்னனின் மகள், ஒரு மாசற்ற மாணிக்கம் என்பதை நிச்சயமாக நம்பு.

சுதா : புண்ணியத்தையும் நரகமாக்கும், உன்னை நம்புவதா? விநோத லீலைகள் புரியும் ஒரு வேசி வீட்டில் இருந்துகொண்டு, அதுவும் அவள் ஏவலுக்குக் கட்டுப்பட்டு நடக்கும், நீயா களங்கமற்றவள்?

**மங்கை :** மகனே! ஒரு வேசி வீட்டில் காலங்கழித்தேன் என்பதற்காக, நான் விபசாரியா? அப்பா...... பாம்பின் சட்டையில் உண்டாகும் அழுக்கு, அந்தப் பாம்புக்குச் சம்பந்தம் உண்டா?

**சுதா :** முள் இல்லாத ரோஜா. மயக்கம் தராத மது. இதை யார் நம்ப முடியும்? பத்தினி என்பதை நிரூபிக்காதவரையில் நீ விபசாரிதான்.

**மங்கை ;** அப்பா! என் நியாயத்தை நிரூபிக்க, எந்த அத்தாட்சியும் இல்லை. என் அழுகைதான் இருக்கிறது.

**புலிகேசி :** அழுகை...அதுதான், பெண்கள் செய்யும் சுலபமான தொழிலாயிற்றே! இளவரசே!...ஒரு மஹா யுத்தம் சாதிக்க முடியாத காரியத்தை...ஒரு பெண், தன் கண்ணீரால் சாதித்துவிடுவாள்... இவள் அழுகைக்காக அனுதாபங்காட்டினால்...

**சுதா :** அரசாங்கத்தின் வாள், இந்தத் தடவையும் ஏமாந்துவிடும். இரண்டாவது மரணத்திலிருந்தும் தப்பித்துவிடுவாள்.

**மங்கை :** மகனே! நான் மரணத்துக்கு அஞ்சவில்லை... மரணம்...வாழும் நேரத்துக்கு வரும், ஓய்வுதானே மரணம். வானத்துக்கு இருட்டும்; வாளுக்குக் கவசமும்; விதைகளுக்கு பழமும்; ஏன் தெரியுமா?... ஓய்வு, எல்லாவற்றிற்கும் உண்டு என்பதை உணர்த்திக் காட்டத்தான்.

**சுதா :** ஒரு மஹா ஞானிக்குக்கூட, உன்னைப்போல் தத்துவம் பேசத்தெரியாது.

**புலிகேசி :** இது தத்துவமல்ல இளவரசே. தப்பித்துக் கொள்வதற்கு உபயோகிக்கும் தந்திரம். இவள்

உயிருக்கு இவ்வளவு நேரம் அவகாசம் கொடுத்ததே பெரிய தவறு. இந்த சாகசக்காரியைச் சீக்கிரம் சித்ரவதை செய்யுங்கள். அப்போதுதான் இங்குள்ள எல்லோருக்கும் சந்தோஷம் ஏற்படும்.

சுதா : ஆம்! கிராதகி—மானைப்போல் பார்க்கத் தெரிந்த உனக்கு, அதன் மானத்தைப்போல் வாழத் தெரிந்ததா? சண்டாளி. சதையின் சிற்றின்பத்துக்காக, அன்னிய புருஷனிடம் அனுராக சுகிர்தம் அனுபவித்து, இந்த மஹா ராஜ்பத்துக்கே மாறாத அவமானத்தைத் தேடித்தந்த நீயும்...உலகம் முடியுமட்டும், தாயைப் பெண்டாளவந்த சண்டாளன் என்ற அபகீர்த்தியைத் தேடிக்கொண்ட நானும் இந்தக் கணம் அழிந்துவிடுவதே மேல். சாஸ்திரங்களுக்கு எதிரிகளாகிவிட்ட நாம், இன்னும் சாகாமல் இருப்பதைக் கேள்விப்பட்டால், இந்த சாம்ராஜ்யத்தில் உள்ள குன்றுகள்கூட வெட்கத்தால் குனிந்துகொள்ளும்! முதலில் உன்னைக்கொன்று, பிறகு இதே வாளை, என் சாவுக்காகவும் எடுத்துக்கொள்ளுகிறேன்.

[என்று கூறி மங்கையர்க்கரசியை வெட்டுவதற்குத் தன் வாளை ஓங்க, அப்போது ஒரு வெளிச்சம் திடீரென்று தோன்றி அந்த வாளை முறித்துவிடுகிறது. இதைக்கண்டு சபை பிரமிக்கிறது சுதாமன் மலைக்கிருன். அப்போது மகனைப் பார்த்து]

மங்கை : மகனே! எந்த மனித சக்தியாலும், என்னை மரணமாக்க முடியாது. அப்பா! அன்றைக்கே இந்தக் கொலைகாரனின் வாள் என் ஆவியைப் பிரித்துவிடும் என்று எண்ணி ஆனந்தப்பட்டேன்.

ஆனால், அந்த வாளால் என்னைத் துண்டிக்க முடிய வில்லை. பிறகு, பெற்றெடுத்துப் பிரியமாக வளர்த்த உன்னைப் பறிகொடுத்தபோதும் என் உயிரை மாய்த்துக்கொள்ளலாம் என்று, மலையின் உச்சியிலிருந்து குதித்தேன். அப்போதும் எனக்கு மரணம் ஏற்படவில்லை. நான் எதிலும் அபாக்ய சாலிதான். துன்பங்களுக்கு விடுதலை தரும் சாவு கூட எனக்குக் கிடைக்கவில்லை. வானத்தின் கீழ், செத்த மாமிசத்துக்குச் சமமாக இருக்கும் நானா, இந்த வார்த்தை வேதனைகளை எல்லாம் அனுப வித்துக்கொண்டு இன்னும் சாகாமலிருக்கப் பூர் வத்தில் யாருக்கு என்ன கொடுமை செய்தேனோ. தெரியவில்லை!

[என்று கூறி, நீதிமன்றத்தில் உள்ளவர்களைப் பார்த்து]

உங்களுக்கு, என் நடத்தையில் நம்பிக்கை இல்லையா? முட்களைப்போலத் தலை நீட்டிக்கொண் டிருக்கும் மலையைத் தன் தோகைகளால் போர்த்தும், மயில்கள் உலவும் மகத தேசத்து மன்னன் மகள், புனிதமானவள் என்ற நம்பிக்கை, உங்களில் ஒரு வருக்குக்கூட கிடையாதா? என் வார்த்தைகளை நம்பா விட்டாலும், என் வாழ்க்கையின் வேதனையை நம்புங் கள். இரண்டையும் ஏற்க மறுத்தாலும், அஸ்திவாரத் துன்பததோடு புறப்பட்டு வரும் என் அழுகையைக் கூடவா நம்ப மறுக்கிறீர்கள்? சொல்லுங்கள்.

[என்று கூற, சபையோர் மௌனமாக இருப் பதைப் பார்த்து]

ஏன், மலையும் சிலையும் போல் மௌனமாகிவிட்டீர் கள். பதில் சொல்லுங்கள்.

[என்று கேட்க, மீண்டும் மௌனமாக இருப்பதைக்கண்டு ஆத்திரத்தோடு]

ஆள் வழக்கற்ற அரசாங்கமா இது? நல்ல கொற்றம்! நல்ல நீதி! நல்ல நியாயம்! நல்ல தீர்ப்பு! சுமந்த தலையும் சும்மாடு மாற்றும் இந்த துரைத்தனத்தில், என் மன உணர்ச்சிகளை நன்ருகப் புரிந்தும், சந்தேகப்படும் மன்னர் எனக்கு—மாமனர்; என்னுடைய புனிதமான சத்திய வாசகத்தை நம்ப மறுப்பவன்—எனக்குப் புத்திரன்; அதர்மங்களுக்குத் தூபம் போடும் புலிகேசி போன்ற அயோக்யன், இந்நாட்டு அமைச்சன்; பட்ட துன்பங்களை எடுத்துக்கூறியும், பரிதாபப் படாதவர் இத்தேசத்துப் பிரஜைகள்; இப்படிப்பட்ட மனுேபாபம் உள்ள நீங்கள், என்னை எப்படி நம்பப் போகிறீர்கள்? எங்கே எனக்கு நீதி கிடைக்கப்போகிறது? என் நியாயம்; நிருபணமாகப் போகிறது? ஏ பாபத்தின் பரிவாரங்களே! பேதைப் பருவத்தில், பெற்ருேருக்கும்; வாலிபத்தில் புருஷனுக்கும், வயோதிகத்தில் பிள்ளைகளுக்கும்; அடிமையாகிவரும் பெண்களுக்கு, நீங்கள் விடுதலை கொடுக்காவிட்டாலும், வேதனையையாவது கொடுக்காமலிருக்கக்கூடாதா? ஏ அக்ரமக்காரர்களே! நீங்கள், நைந்திருக்கும் நாணலை ஒடிக்காமலும்; மங்கி எரியும் தீபத்தை அணைக்காமலும் இருந்துவிடுங்கள். அதுபோதும்! அதுவே, நீங்கள் பெண் இனத்திற்குச் செய்யும் பேருபகாரமாகும். ஐயோ, பிறந்த நேரத்திலிருந்து, பிரேதமாகும் வரையிலும், துயரங்களையே அனுபவிக்க வேண்டும் என்பதுதான் என் தலைவிதியா? காலையில் அரும்பி, மாலையில் மலர்ந்து, மறு உதயத்துக்குள் மரணக் கதை பேசும், ஒரு மலரின் அற்ப நேர வாழ்வுக்கு இருக்கும் ஆனந்தங்கூட, நான் வாழ்ந்த நேரத்துக்கு இல்லையே! என் துக்கத்துக்கு ஓய்வே

கிடையாதா? பறவைகளுக்குக் கூடும்; பாம்புக்குப் புற்றும்; தண்ணீருக்குப் பள்ளமும், ஒய்வுக்காகப் படைத்த தெய்வம், என் ஓய்வுக்கு ஏன் ஒன்றும் படைக்கவில்லை? அட தெய்வமே! சுக துக்கங்கள் சுற்றிக் கொண்டிருக்கும், இந்தப் பாழும் பூமியில், நான் ஏன் பெண்ணுகப் பிறந்தேன். நான் ஒரு பாம்பாக இருந்தாலும், இந்த உலகம் எனக்குப் பால் கொடுத்து வளர்க்கும். ஒரு வேம்பாக இருந்தாலும், நான் வெட்டுப் படாமல் வளருவேன். ஐயோ! இந்தப் பெண் ஜென்மமே மஹா புண்ஜென்மந்தான். என்ன உலகம் இது? எங்கு பார்த்தாலும் அதர்மந்தானு? உலகத்தில் உண்மைக்கே இடமில்லையா? வேதம், சாஸ்திரம், இவைகளின் வார்த்தைகள் எல்லாம், வெறும் சப்தம் தானு? தேவி! சுக்ரவார விரதம் அனுஷ்டித்து வந்ததற்கு எனக்குக் கிடைக்கும் சுகம் இதுதானு? அநீதிக்கும் அக்ரமங்களுக்கும் ஆதரவு காட்டுவது தான் உன் கருணையா? துயரங்களுக்குப் பரிகாரம் தேடித்தராத நீயும் ஒரு தெய்வந்தானு? தெய்வம்... அநாதி காலந்தொட்டு மனிதன்மீது கட்டாயப்படுத்தப் பட்டு வரும் அவசியமில்லாத உளுத்துப்போன ஒரு மூடநம்பிக்கைதான் தெய்வம்! கடவுளாம்! தெய்வமாம்! எல்லாம் கட்டுக் கதை! வயிறு வளர்ப்பதற்குச் சூழ்ச்சிக் காரர்கள் உற்பத்தி செய்து வைத்திருக்கும் சொல் வியாபாரம்! கடவுள் எங்குமே கிடையாது.

[என்று கூறிக் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து]

மங்கை: ஆ! என்ன!...... நான் தானு இப்படிப் பேசுகிறேன். அண்டசராசரங்களையும் காத்து ரட்சிக்கும் ...... ஆண்டவன் இல்லை என்று யார் சொன்னது! தெய்வம் இருக்கிறது. தெய்வம் இருக்கிறது. தெய்வம் இருக்கும் போது சத்தியம்

ஜிவிக்குமே! பகவானும், சத்தியமும் இருக்கும் போது, பஞ்ச சக்திகளிலும் தலைசிறந்த பதிவிரதா சக்தி மட்டும் இல்லாமலா போய் விடும். ஏழு நாள் பரியந்தம் ...... சூரியனை உதிக்காதபடி செய்து காட்டியது...... நளாயினியின் பதிவிரதா சக்தி! மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக மாற்றியது அனுசூயாவின், பதிவிரதா சக்தி. இறந்த புருஷனை எமனிடமிருந்து மீட்டுத் தந்தது...சாவித்திரியின் பதிவிரதா சக்தி. பதிவிரதா சக்தி! பதிவிரதா சக்தி! பதிவிரதா சக்தி!

[என்று சொல்ல, அப்போது மங்கையர்க்கரசியின் பதிவிரதாசக்தி கந்தர்வ லோகத்தை எரிக்க, உடனே சசிகலா காந்தரூபனை ஒரு மாலையாக மாற்றி எடுத்துக் கொண்டு மதுராங்கதன் நீதி மன்றத்தில் தோன்ற]

**சசிகலா:** என்னைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள். [என்று கூறிக் கொண்டே ஓடிவந்து மங்கையர்கரசியின் காலடியில் வணங்கி]

**சசி :** அம்மா ...என்னை மன்னித்து விடுங்கள். இத்தனை விபரீதங்களுக்கும் நான்தான் காரணம்.

[என்று கூறி மதுராங்கதனைப் பார்த்து]

**சசி :** அரசே! சுதாமன் காந்தரூபனுக்கு பிறந்தவன் தான். மங்கையர்க்கரசி...மாசற்ற மகா உத்தமி. இதோ உங்கள் காந்தரூபன்.

[என்று கூறி மாலையை வீசி எறிய, மாலை காந்தரூபனாக மாறுகிறது. உடனே சசிகலா மறைந்து விடுகிறாள். மதுராங்கதன் தன் மகனைக் கண்டு]

மதுரா : காந்தரூபா!

காந்த : தந்தையே!

[என்று கூறி இருவரும் தழுவிக்கொள்ள, அப்போது கூண்டிலிருந்த மங்கையர்க்கரசி தன் மணாளனைப் பார்த்தவுடன், சந்தோஷப்பட்டுக் கூண்டைவிட்டு இறங்கித் தன் புருஷனிடம் வரும்போது]

சுதா : தாயே! என்னை மன்னித்து விடுங்கள்.

மங்கை : வருத்தப்படாதே அப்பா. எழுந்திரு சுதாமா. உன்னால்தான் மீண்டும் என்பதியை அடையும் பாக்கியத்தைப் பெற்றேன். நமக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது ப்ரபு! இதோ உங்கள் புத்ரன். சுதாமன் எவ்வளவு பெரியவனாகிவிட்டான் பார்த்தீர்களா?

காந்த : சுதாமா!

[என்று கூறித் தழுவிக்கொள்ள, அப்போது மதுராங்கதன் மகன் காந்தரூபனைப் பார்த்து]

மதுரா : காந்தரூபா ... இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது. உன்னைப் பிரிந்ததிலிருந்து ... மேகத்தைக் காணாத மயிலைப்போல் மனம் ஒடிந்திருந்தேன். 'வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையிலும் தேடிப் பார்த்தும் கிடைக்காத உன்னை அம்பிகையின் அருளால் அடையப் பெற்றேன்.

காந்த : அப்பா! பிரிந்துபோன நாம் மீண்டும் சேர்வதற்கு அம்பிகையின் அருள் காரணமல்ல, பூலோகத்தின் பத்தினி தெய்வமாகவும் பெண்களின் திலகமாகவும் விளங்கும் ... மங்கையர்க்கரசியின்

கற்பின் சக்திதான் நம்மை ஒன்று சேர்த்து வைத்தது.

[என்று கூற, அப்போது மாமன் மதுராங்கத னின் சந்தேகம் செத்துவிடுகிறது. கணவன் காந்தருபன் களிப்படைகிறன். மகன் சுதா மன் அப்பனைப் பார்த்து ஆனந்தப்படுகிறன். மங்கையர்க்கரசி ... மனித உலகத்தின் பத்தினி தெய்வமாகிறள். குழப்பத்திலிருந்து சபை குதூகலமடைகிறது. அவள் கற்பு சாகாத சரித்திரமாகிறது. நீதி வென்று விடுகிறது.]

முற்றும்